Follow us

# தமிழன்

THAMILAN தமிලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 544 சுபகிருது வருடம், ஆனி மாதம் 02ஆம் திகதி வியாழக்கிழமை (16.06.2022) ஹிஜ்ரி - 1443, ஜுல்ஹஃதா - 15, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50

## உஷ்



ஜனாதிபதிக்கும், பிரதமருக்குமிடையில் நிர்வாக ரீதியான தொடர்பாடல்கள் முறையாக இடம்பெறுவதில்லை என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. தம்மிக்க பெரேரா எம்.பியாக நியமிக்கப்படுவது குறித்தோ அல்லது அவருக்கு அமைச்சு ஒதுக்கப்பட்டமை குறித்தோ ரணில் முறையான அறிவிப்பினை பெறவில்லையாம். அதேபோல் கடந்த வெள்ளிக்கிழமை சுற்றுலாத்துறை அதிகாரிகளை அழைத்து ஜனாதிபதி பேசினார். அதே அதிகாரிகளை அதற்கடுத்த திங்கட்கிழமை ரணில் சந்தித்து பேசியிருக்கிறார். இந்த நிர்வாக தொடர்பாடல் குழப்பத்தால் குழம்பிப்போயிருக்கின்றனராம் அதிகாரிகள்.

## கமெண்ட் கந்தர்..




# எரிபொருள் இன்றி நாடே ஸ்தம்பிதம்!

- மக்கள் வீதிகளில் அலைக்கழியும் பரிதாபம்
- அத்தியாவசிய சேவைகள் முற்றாக முடங்கும் அபாயம்

யோ.தர்மராஜ்

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பல துறைகள் முற்றாக முடங்கி, முழு நாடும் ஸ்தம்பிதமடையும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. நாடளாவிய ரீதியில் நாளுக்கு நாள் எரிபொருளுக்கான தட்டுப்பாடு அதிகரித்து வருவதால், வாகனங்களும் மக்களும் பல மணி நேரமாக, நாட்கள் கடந்தும் வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இதேவேளை, எரிபொருள் கோரி நாடளாவிய ரீதியில் மக்கள் வீதிகளை மறித்து போராடுவதுடன், கொழும்பில் அமைந்துள்ள பெற்றோலிய கூட்டுத்தாபனத்தையும் நேற்று சுற்றிவளைத்து போராட்டம் நடத்தினர்.

02 பக்கம்

## எரிபொருள் தேவை குறித்து ரஷ்யாவுடன் பேசவுள்ளோம்

### விமல் வீரவங்ச திட்டவட்டம்



யோ.தர்மராஜ்

"நாட்டுக்கு தேவையான எரிபொருளை அமெரிக்காவும் வழங்காதபோது, மற்றொரு நாட்டிடமிருந்து எரிபொருளை பெற்றுக்கொள்ள ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் என யாருக்கும் முதுகெலும்பு இல்லை" என முன்னாள் அமைச்சரும் சுயாதீனக்குழு உறுப்பினருமான விமல் வீரவங்ச தெரிவித்தார்.

02 பக்கம்

## 21ஆவது திருத்தத்தை நிறைவேற்ற மஹிந்த ராஜபக்ஷ நிபந்தனை



யோ.தர்மராஜ்

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை நீக்கிவிட்டு, நாடாளுமன்றத்தை பலப்படுத்தும் யோசனையை உள்ளடக்கினால், 21ஆவது திருத்தத்துக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆதரவளிப்பதாக கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன்...

02 பக்கம்

## கந்தப்பளை காணி ஊழல்; நூரளை பிரதேச சபைத் தலைவரை அதிரடியாக நீக்கியது இ.தொ.கா.

நிர்ஷன் இராமானுஜம்





நுவரெலியா, கந்தப்பளை காணி ஊழல் தொடர்பில் 'தமிழன்' வார இதழ் ஆதாரங்களுடன் தகவல் வெளியிட்டிருந்த நிலையில், நுவரெலியா பிரதேச சபைத் தலைவர் வேலு யோகராஜை, கட்சியில் வகித்து வந்த அனைத்துப் பதவிகளிலிருந்தும் நேற்று அதிரடியாக இடைநிறுத்தியது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்.

02 பக்கம்

## பிரச்சினைகளை தீர்க்க முழு முயற்சி; பொறுமைகாக்கும் மக்களுக்கு நன்றி!

### பிரதமர் ரணில் தெரிவிப்பு



யோ.தர்மராஜ்

"பிரச்சினைக்கு தீர்வு காணும்வரை பாதிப்புகள் மற்றும் துன்பங்களை பொறுமையாக ஏற்றுக்கொண்டுள்ள அனைத்து மக்களுக்கும் நாங்கள் நன்றி தெரிவிக்கின்றோம்" என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்தோடு, ஏற்கனவே அறிவித்தது போன்று, எதிர்வரும் மூன்று வாரங்களே எரிபொருளுக்கான நெருக்கடியான வாரங்களாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடிகள் குறித்து நாட்டு மக்களுக்கு நேற்று முன்தினம் இரவு ஆற்றிய விசேட உரையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

02 பக்கம்




## ஐ.தே.க. உறுப்புரிமை பெறுமளவிற்கு இன்னும் மூளை கெட்டுவிடவில்லை!

### பொங்குகிறார் பொதுஜன பெரமுன செயலாளர்



யோ.தர்மராஜ்

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமையை பெற்றுக்கொள்ளுமளவிற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களுக்கு மூளை வியாதி இல்லை என அக்கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணையவுள்ளதாக கூறப்படுவது குறித்து வினவிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

02 பக்கம்

## பொலிஸ் அமைச்சை நான் ஏற்றால் அனைவரையும் சிறையிலடைப்பேன்!

### சரத் பொன்சேகா தெரிவிப்பு



யோ.தர்மராஜ்

அரசாங்கத்தில் நான் பொலிஸ் அமைச்சை பொறுப்பேற்றால் முதலில் இந்த அரசாங்கத்திலுள்ள அனைவரையும் சிறையிலடைக்க வேண்டிவரும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

02 பக்கம்

## சமையல் எரிவாயு விலையை 200 ரூபாவால் அதிகரிக்க வேண்டும்

### லிட்ரோ நிறுவன புதிய தலைவர் தெரிவிப்பு

யோ.தர்மராஜ்

விலை அதிகம் என்றாலும் ஒரு இலட்சம் மெட்ரிக் தொன் எரிவாயுவை பெற்று இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள எரிவாயு நெருக்கடியைத் தீர்க்க அமைச்சரவை தீர்மானித்துள்ளதால், அனைத்து காரணங்களையும் கருத்தில்கொண்டு எரிவாயு சிலிண்டரின் விலையை 200 ரூபாவினால் அதிகரிக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் புதிய தலைவர் முதித் பீரிஸ் தெரிவித்தார்.

02 பக்கம்





எரிபொருள் பிரச்சினை காரணமாக பொதுப்போக்குவரத்து வரையறுக்கப்பட்டதால் நேற்று கரையோர ரயில்களில் பயணிகள் எஞ்சின் பெட்டியில் ஏறி பயணம் செய்ததை காண முடிந்தது.

## எரிபொருள் தேவை...

எனவே, நாட்டிலுள்ள எரிபொருள், எரிவாயு மற்றும் உரத் தட்டுப்பாடுகளுக்கு ரஷ்யாவினால் எவ்வாறான உதவிகளை வழங்க முடியும் என்பது குறித்து ரஷ்ய தூதுவரை சந்தித்து கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆளுந்தரப்பிலிருந்து பிரிந்து சுயாதீனமாக செயற்படும் 10 கட்சிகளும் நேற்றுமுன்தினம் சந்தித்து புதிய கூட்டணி அமைப்பது தொடர்பாக இடம்பெற்ற பேச்சுவார்த்தைக்கு பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், எங்களுடைய கட்சிகள் இணைந்து உருவாக்கப்படவுள்ள புதிய கூட்டணி தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. இதேவேளை, நாட்டின் தற்போதைய நிலைமை குறித்தும் அதிகம் கவனம் செலுத்தப்பட்டது. குறிப்பாக, நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து ரஷ்ய தூதுவருடன் கலந்துரையாடுவதற்காக அவரை சந்திப்பதற்கு நாங்கள் தீர்மானித்துள்ளோம். அதன்படி, உரிய நேரத்தை பெற்றுக்கொண்டு எங்களுடைய தரப்பினர் அவரை சந்திப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

இதன்போது, தற்போது நாட்டிலுள்ள எரிபொருள், எரிவாயு மற்றும் உரத் தட்டுப்பாடுகளுக்கு ரஷ்யாவினால் எவ்வாறான உதவிகளை வழங்க முடியும்.

அந்த உதவிகளை வழங்குவதற்கு தடையாகவுள்ள விடயங்கள் என்ன, அந்த தடைகள் எங்களுடைய நாட்டு பக்கம் இருக்குமாக இருந்தால் அதனை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் என்ன என்பது தொடர்பாக கலந்துரையாடுவதற்கு தீர்மானித்துள்ளோம். அதன்படி, வெகுவிரைவில் இலங்கைக்கான ரஷ்யத் தூதுவரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவோம்.

இதேவேளை, ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சருக்கும் முதுகெலும்பில்லை. எரிபொருள் இல்லாது, வீதியில் நிற்கும் மக்களை பற்றி சிந்திக்காது, அமெரிக்கா பற்றி சிந்திக்கின்றனர். அவ்வாறாயின் நாட்டுக்கு தேவையான எரிபொருளை அமெரிக்கா வழங்க வேண்டும்.

அவர்களும் வழங்காது, மற்றொரு இடத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய அளவுக்கு ஜனாதிபதிக்கு முதுகெலும்பு இல்லை என்றால், அவ்வாறான ஒருவருக்கு நாட்டின் ஆட்சியை இனியும் ஒப்படைக்க முடியாது - என்றார்.

## சமையல் எரிவாயு...

லிட்ரோவின் புதிய தலைவராக பொறுப்பேற்று, தன்னுடைய கடமைகளை நேற்று (15) ஆரம்பித்தபோது, ஊடகவியலாளர் சந்திப்பிலும் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் நாங்கள் தற்போது கப்பலிலிருந்து 3 ஆயிரம் 900 மெட்ரிக் தொன் எரிவாயுவை தரையிறக்கி வருகிறோம். இது மிகவும் சிறிய தொகை. இது தற்போதுள்ள பாரிய பிரச்சினைக்கு தீர்வாக அமையாது. குறிப்பாக, தற்போதைய கப்பலுக்கு பின்னர் ஒரு கப்பலையும் கொண்டுவருவதற்குக்கூட திட்டமிடப்படவில்லை. பொறுப்பற்ற முறையிலேயே கடந்த நிர்வாகம் நடந்து கொண்டுள்ளதாக எனக்கு தோன்றுகிறது.

கப்பல்கள் தரையிறக்கும் போதாவது, பணத்தை தருகின்றோம் என சில விநியோகஸ்தர்களிடம் பேசியுள்ளதாகக் கூட எனக்கு தெரியவில்லை. கடன் மாத்திரமே எனக்கு தெரிகிறது. இது கடினமான விடயம் என்பது எனக்கு தெரியும். ஆனால், நாட்டுக்காக ஏதேனும் ஒன்றை செய்ய வேண்டிய பொறுப்பு எனக்குள்ளது என்பதாலேயே இந்த பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளேன். நல்ல திட்டங்கள் இருந்தால் எரிவாயு பிரச்சினையை எங்களால் தீர்க்க முடியும்.

இப்போது நான் இங்கே என்ன கூறினாலும், இன்னும் ஓரிரு மாதங்களில் எரிவாயு நெருக்கடியைப் பற்றி மக்கள் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படவிட்டால் எந்த பயனுமில்லை. எனவே, கூறுவதை விட செய்து காட்டுவதையே நான் விரும்புகின்றேன்.

லிட்ரோ எரிவாயு மற்றும் லாஃப்ஸ் எரிவாயுவுக்கு இடையே பாரிய விலை வித்தியாசம் இருக்கிறது. சந்தையில் 20 வீதமே அவர்கள் விநியோகத்தை முன்னெடுக்கின்றனர். அவர்களின் விலையேற்றத்தால் எங்களைவிட அவர்கள் நிதி பலத்தை பெறக்கூடியதாக இருந்தது. ஆனால், அவர்களுக்கும் சில பிரச்சினைகள் இருக்கின்றன.

தாய்லாந்து எரிவாயு விநியோக நிறுவனத்திடமே நீண்டகால விநியோக ஒப்பந்தத்தை வழங்க யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது. அதன்போது, அவர்கள் 96 – 98 டொலர் விலையே குறிப்பிட்டிருந்தனர். குறித்த நிறுவனம் நீண்ட கால கடன் கடிதத்தை கோரியிருந்தது. அதை வழங்குவதற்கு லிட்ரோ நிறுவனம் அல்லது அரசாங்கத்திற்கும் நிதி பலம் இருக்கவில்லை. ஆனால், நிபந்தனையை தளர்த்தி கொடுக்கல் வாங்கல்களை முன்னெடுக்குமாறு லிட்ரோ நிறுவனம் பலமுறை கோரியிருந்தது. ஆனால், அப்போது, தற்போதைய விநியோகஸ்தர் 129 டொலர் விலையையே குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை, எரிவாயு நெருக்கடி தீர்க்கப்படும் வரை, இரண்டு நிறுவனங்களுக்கு (தாய்லாந்து எரிவாயு நிறுவனம் மற்றும் ஓமன் எரிவாயு நிறுவனம்) குறுகிய காலத்தில் எரிவாயு வழங்குவதற்கு அனுமதி வழங்க லிட்ரோ நிறுவனம் முடிவு செய்துள்ளது. ஆனால், அப்போது தாய்லாந்து நிறுவனம் 112 டொலர் விலையையும் ஓமான் எரிவாயு நிறுவனம் 129 டொலர் விலையையும் குறிப்பிட்டிருந்தது. ஆனால், தாய்லாந்து நிறுவனம் குறித்த விலைக்கு 6 ஆயிரம் மெட்ரிக் தொன் மாத்திரமே வழங்கியுள்ளது."

ஆனால், ஓமான் எரிவாயு நிறுவனம் நான்கு மாதங்களுக்கு ஒரு தொன்னுக்கு 129 டொலர் வீதம் குறைந்தபட்சம் ஒரு இலட்ச தொன் எரிவாயுவை பெற்றுக்கொள்ள வேண்டும் எனக்கோரியது. அதன்படி, மாலைத்தீவில் தங்களது பிரதான கப்பலை நிறுத்தி அங்கிருந்து இலங்கைக்கு கொண்டுச் செல்வதாகக் கூறினர்.

எனவே, குறைந்த விலையில் உள்ள நிறுவனம் 6 ஆயிரம் மெட்ரிக் தொன் மட்டுமே வழங்குகிறது. ஆனால், அது போதுமானதல்ல என அரசாங்கம் முடிவெடுத்திருக்கும். எனவே, அதிக விலை என்றாலும், நாட்டில் ஏற்பட்டுள்ள எரிவாயு நெருக்கடியைத் தீர்ப்பதற்கு ஓமான் எரிவாயு நிறுவனத்துடன் செல்ல அமைச்சரவை முடிவெடுத்திருந்தது.

அதன்படி, விலை அதிகம் என்றாலும் ஒரு இலட்சம் மெட்ரிக் தொன் எரிவாயுவை பெற்று இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள எரிவாயு நெருக்கடியை தீர்க்க அமைச்சரவை தீர்மானித்ததுடன், அதனை நடைமுறைப்படுத்த லிட்ரோ நிறுவனத்திற்கு ஆலோசனை வழங்கியது.

இந்த நிலையில், நாட்டில் தற்போது எரிவாயு சிலிண்டரின் விலை 4 ஆயிரத்து 860 ரூபாவாக காணப்படுகின்றது.

ஆனால், அனைத்து காரணங்களையும் கருத்தில் கொண்டு சிலிண்டரின் விலையை 200 ரூபாவினால் அதிகரிக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளோம் - என்றார்.

## எரிபொருள் இன்றி...

இதனால், வீதிகள் முற்றாக முடங்குவதோடு, போக்குவரத்துகளும் பாதிக்கப்படுவதால் வேலைக்குச் சென்றுவரும் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

நாட்டில் டொலர் தட்டுப்பாட்டினால் தொடரும் எரிபொருள் தட்டுப்பாட்டினால் மின்சார உற்பத்திகள், போக்குவரத்துகள், தொழிற்சாலைகள், தொழில்நிறுவனங்கள், நீர் வழங்கல், மரக்கறி விநியோகம், பாடசாலை போக்குவரத்து, உற்பத்தித்துறைகள், ஹோட்டல்கள் என பல துறைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால், முழு நாடும் ஸ்தம்பிதமடைந்துள்ளது.

மின் உற்பத்திக்கு தேவையான டீசலை பெற்றுக்கொள்ள முடியாதமையினால் இன்று வரை நாட்டில் 2 மணித்தியாலத்திற்கும் அதிகமான மின்வெட்டுகள் அமுல் படுத்தப்பட்டுள்ளதோடு, அரச நிறுவனங்களுக்கும் வெள்ளிக்கிழமை விடுமுறை விடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, அரச நிறுவனங்களுக்கான எரிபொருள் விநியோகத்தை கட்டுப்படுத்தும் விதத்திலேயே இந்த விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக அரச மட்ட தகவல்கள் தெரிவித்தன.

அதேபோன்று, எரிபொருள் தட்டுப்பாட்டால் நாடளாவிய ரீதியிலுள்ள எரிபொருள் நிலையங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட வகையிலேயே எரிபொருள் விநியோகம் முன்னெடுக்கப்படுவதால், வரிசையில் காத்திருக்கும் குறிப்பிட்ட மக்களுக்கு மாத்திரம் எரிபொருள் வழங்கும் வாய்ப்பிருப்பதால், சில எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் இல்லை என்ற அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளதுடன், சில நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

இதனால், போக்குவரத்துக்கு தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக மக்களும் வாகனங்களும் பல மணிநேரங்களையும் சில நேரங்களில் இரண்டு மூன்று நாட்கள் அதே வரிசையில் காத்திருக்க வேண்டியுள்ளது. பல இடங்களில் மக்கள் அவ்விடத்திலேயே தங்கியிருந்து எரிபொருளை பெற்றுக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

சில பகுதிகளில் எரிபொருள் விநியோக பவுசர்கள் வேறொரு இடத்துக்குச் செல்லும் போது, அதனை தடுத்து நிறுத்தி தங்களுக்கு தேவையான எரிபொருளை வழங்குமாறு மக்கள் போராட்டத்தில் ஈடுபடுவதால், எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு தற்போது தீவிர பாதுகாப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. சில இடங்களில் இராணுவம் மற்றும் பொலிஸாரும் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு வாகனங்கள் நீண்ட வரிசையில் காத்திருப்பதால், போக்குவரத்து துறைகள் தற்போது முடங்கி போயுள்ளன. குறிப்பாக, 80வீதமான தனியார் பஸ்கள் போக்குவரத்தில் இருந்து விலகியுள்ளதால், தற்போது நாளொன்றுக்கு 25 – 30 வரையான பஸ்களே போக்குவரத்தில் ஈடுபடுவதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பஸ் போக்குவரத்துகள் குறைந்துள்ளதால், பயணிகளுக்கான போக்குவரத்துகளும் முடங்கியுள்ளன. இதனால், ரயிலில் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், ரயிலிலும் பயணிகள் நிரம்பி வழிகின்றனர். சில இடங்களில் ரயில்களை நிறுத்திச் செல்ல முடியாதளவுக்கு பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அதேபோன்று, தற்போது அத்தியாவசிய தேவைக்கு மாத்திரம் எரிபொருள் வழங்கும் நிலைமை காணப்படுவதால் தனியார் வாகனங்களின் போக்குவரத்துகளும் குறைவடைந்துள்ளன.

மேலும், பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப் பட்டுள்ள நிலையில், எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மாணவர்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களும் போக்குவரத்திலிருந்து விலகியுள்ளதால், மாணவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அதேபோன்று, முச்சக்கர வண்டிகளின் போக்குவரத்துகளும் குறைந்துள்ளதால், அவசர தேவைகளுக்காக முச்சக்கரவண்டியை நம்பியுள்ள மக்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். சில நேரங்களில் வீட்டிலிருக்கும் நோயாளிகளை அழைத்துச் செல்வதிலும் பாரிய சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இதேவேளை, மரக்கறிகளை ஏற்றிச் செல்வதற்குக்கூட எரிபொருள் இல்லாதமை யினால் இன்று மரக்கறிகளின் விலைகள் உச்சம் தொட்டுள்ளன. பல மரக்கறி சந்தைகள் மூடப்பட்டுள்ளதுடன், கொழும்பு உள்ளிட்ட நகரங்களுக்கு மரக்கறிகளை ஏற்றிச் செல்ல முடியாதமையினால், பல மரக்கறி சந்தைகளில் மரக்கறிகள் பழுதடைவதாகவும் விற்பனையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, பிரதான நகரங்களிலிருந்து ஏனைய நகரங்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களைக் கொண்டு செல்வதிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் பல பகுதிகளில் பொருட்களுக்கான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், அப்பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்துள்ளனர்.

அத்தோடு, நாட்டுக்கு தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக இந்தியா வழங்கியிருந்த கடனின் இறுதி கப்பல் நாட்டை வந்தடையவுள்ளதுடன், அதன் பின்னர் எரிபொருள் கப்பலுக்கான டொலரோ அல்லது கடனோ கையிருப்பில் இல்லாததால் நாட்டின் நிலைமை என்னவாகும் என்பது பெரும் கேள்விக்குறியாகியுள்ளது.

நாட்டில் அத்தியாவசிய தேவைகளுக்காக மாத்திரம் எரிபொருள் விநியோகம் முன்னெடுக்கப்படுவதால், பல துறைகள் முற்றாக முடங்கியுள்ளதோடு, எரிபொருளை நம்பியுள்ள நிறுவனங்களின் வியாபார செயற்பாடுகளும் தொடர்ந்து முடங்கும் நிலைமை ஏற்பட்டுள்ளன. ஆகவே, எரிபொருள் தட்டுப்பாடு தொடருமாக இருந்தால் போக்குவரத்துகள், மின்உற்பத்திகள், தொழில் நிறுவனங்கள் என அனைத்து துறையும் முடங்கி, முழு நாடும் ஸ்தம்பிதமடையும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

## 21ஆவது திருத்தத்தை...

இடம்பெற்ற பேச்சுவார்த்தையின்போதே இவர் இதனைத் தெரிவித்ததாக, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

21ஆவது திருத்தத்திற்கு பெசில் ராஜபக்ஷ உள்ளிட்ட முக்கிய உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவிப்பதாக ஏற்கனவே அறிவித்துள்ளதோடு, பெசில் ராஜபக்ஷவும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் இராஜினாமா செய்துள்ளார்.

இந்த நிலையில், 21ஆவது திருத்தத்தை நாடாளுமன்றத்தில் முன்வைப்பது குறித்து பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படும் நிலையிலேயே, மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது, 21ஆவது திருத்தம் கொண்டு வரப்படுவதற்கு முன்னர் நாட்டு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதோடு, நாடாளுமன்றத்தை பலப்படுத்தும் திருத்தத்திற்கு நாங்கள் முழு ஆதரவையும் வழங்குவோம். ஆனால், அதிகாரம் இல்லாத பிரதமருக்கு நிறைவேற்று அதிகாரத்தை வழங்குவதற்கு நாங்கள் எதிர்ப்பை வெளியிடுவதாகவும் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## பொலிஸ் அமைச்சை...

அத்தோடு, நாட்டின் தற்போதைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண எவ்வித திட்டங்களும் இல்லாமலே பிரதமர் உள்ளிட்ட அரசாங்கம் செயற்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கம்பஹா பகுதியில் நேற்று (15) இடம்பெற்ற சமய நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், பிரதமர் கூறினாலும் கூறாவிட்டாலும் நாட்டில் உண்ண உணவில்லை. உணவு இல்லை என்றால் மக்களுக்கு உண்ண முடியாதுதான். ஆனால், பிரதமர் பதவி ஏற்று தொடக்கம், இன்று உணவு இல்லாமல் போகும். அடுத்த மாதத்தில் உண்ண உணவு இல்லாது போகும் எனக் கூறுகிறார். எதிர்காலம் குறித்து அவர் கூற வேண்டியதில்லை. தற்போதே நாட்டில் உண்ண உணவில்லை.

நாட்டில் உணவுத் தட்டுப்பாட்டுக்கு தீர்வை தேட வேண்டும். தற்போது நாட்டில் எரிவாயு இல்லை. சில இடங்களில் இளைஞர்கள் இணைந்து தானம் வழங்குகின்றனர். ஆனால், எரிவாயு இல்லாது, விறகு அடுப்பை கொண்டு சமையல் செய்கின்றனர். இது இலகுவான விடயமல்ல.

குறைந்தது, இந்த நாட்டில் போசன் போயாவிற்குக் கூட எரிவாயுவை வழங்குவதற்கு எவ்வித ஏற்பாடுகளையும் செய்யவில்லை. மக்களின் பிரச்சினைகளை புரிந்துகொள்ளவில்லை. மாறாக, கடந்த காலங்களில் கூறிய கதைகளைக் கூறி ஏமாற்று வேலையை மாத்திரமே முன்னெடுத்துச் செல்கின்றனர். பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. உண்மையில் பொலிஸ் அமைச்சை நான் பொறுப்பேற்றால் முதலில் இந்த அரசாங்கத்திலுள்ள அனைவரையும் சிறையில் அடைக்க வேண்டிவரும். எனவே, நான் பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்வதற்கு சில விடயங்களை முன்வைத்தேன். அதனை ஏற்றுக்கொள்வதற்கு ஜனாதிபதி முன்வரவில்லை.

இதனையடுத்து, பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு ரணில் விக்ரமசிங்கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோது, அவர் பாய்ந்துகொண்டு பதவியை ஏற்றுக்கொண்டார் - என்றார்.

## ஐ.தே.க. உறுப்புரிமை...

அதன்படி, கட்சியிலிருந்து எந்தவொரு உறுப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணையவுள்ளதாக எனக்கு எவ்வித தகவல்களும் தெரியப்படுத்தவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்பது நாட்டில் பாரிய கட்சியாகும். அவ்வாறானதொரு கட்சியை விட்டுவிட்டு மற்றொரு கட்சிக்குச் செல்லும் அளவுக்கு இங்குயாருக்கும் மூளை வியாதி இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு, நாடாளுமன்றத்தில் பெரும்பான் மையை கொண்டுள்ள கட்சியை விட்டு, பெரும்பான்மையில்லாத கட்சியுடன் யாரும் இணைய மாட்டார்கள் என்றே நான் நினைக்கின்றேன். எங்களுடைய கட்சியின் அரசியலை மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பெசில் ராஜபக்ஷ தலைமையில் முன்னோக்கிக் கொண்டு செல்வோம் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, எங்களுடைய கட்சியின் தேசிய பட்டியல் உறுப்பினர் பதவியிலிருந்து மேலும் பலர் விலகவுள்ளதாக கூறப்படும் விடயத்திலும் உண்மையில்லை. அவ்வாறு விலகுவதாகயாரும் இதுவரை என்னிடம் தெரியப்படுத்தவுமில்லை – என்றார்.

## பிரச்சினைகளை தீர்க்க...

நான் ஏற்கனவே அறிவித்தது போன்று, எதிர்வரும் மூன்று வாரங்களே எரிபொருளுக்கான நெருக்கடியான வாரங்களாக இருக்கும். எரிபொருள் மற்றும் எரிவாயுவை பெற்றுக்கொள்வதற்காக மக்கள் வரிசைகளில் காத்துக்கொண்டிருப்பதை பார்க்கும்போதே தற்போதைய நிலையின் பாதிப்பு புரிகிறது.

இந்த நிலையில், 3ஆயிரத்து 500 மெட்ரிக் தொன் எரிவாயு அடங்கிய கப்பல் நாட்டை வந்தடைந்துள்ளது. இதில் ஹோட்டல்கள், வைத்தியசாலைகள் மற்றும் தகன நிலையங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தே எரிவாயு விநியோகம் முன்னெடுக்கப்படும். இனிவரும் கப்பல்களிலிருந்து நான்கு மாதங்களுக்கு தேவையான எரிவாயுவை பெற்றுக்கொள்ள முடியும். ஆனால், அதனை பெற்றுக்கொள்ள 14 நாட்களுக்கு மேல் செல்லும். எனினும், அதற்கு முன்னர் ஒரு எரிவாயு கப்பலையாவது பெற்றுக்கொள்வதற்கு நாங்கள் எதிர்பார்த்துள்ளோம்.

நாட்டில் தொடர்ந்து எரிபொருளை வழங்குவதற்கே நாங்கள் தீர்மானித்தோம். ஆனால், தற்போதைய சூழ்நிலையில் 50வீத விநியோகத்தை முன்னெடுத்தால் மாத்திரமே எரிபொருளை தொடர்ந்து வழங்க முடியும். ஆனால், அத்தியாவசிய சேவைகள், மின்உற்பத்தி, போக்குவரத்து உள்ளிட்டவைக்கே நாங்கள் முக்கியத்துவம் கொடுத்துள்ளோம்.

அதன்படி, தற்போது கையிருப்பிலுள்ள தொகையை அடுத்த 7 நாட்களுக்கு விநியோகிக்க முடியும். ஆனால், 16ஆம் திகதி (இன்று) 40 ஆயிரம் மெட்ரிக் தொன் அடங்கிய மற்றொரு எரிபொருள் கப்பலும் நாட்டுக்கு வருகை தரும். அதனைத் தொடர்ந்து பெற்றோல் மற்றும் டீசல் கப்பலையும் பெற்றுக்கொண்டுள்ளோம். எனவே, மாத இறுதி வரை தேவையான எரிபொருளை நாங்கள் பெற்றுக்கொண்டுள்ளோம்.

இதனையடுத்து, அடுத்த மாதத்துக்கு தேவையான இரு எரிபொருள் கப்பலை பெற்றுக்கொள்வதற்கும் பேச்சுவார்த்தை நடத்திவருகின்றோம். இதனைத் தொடர்ந்து இந்தியாவுடன் புதிய கடனுக்காக ஒப்பந்தத்தை மேற்கொள்வதன் ஊடாக அடுத்த நான்கு மாதங்களுக்கு தேவையான எரிபொருள் எங்கள் கைவசம் இருக்கும்.

எனினும், எரிபொருளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கும்போது அதற்கு தேவையான டொலரை தேடிக்கொள்ள வேண்டியுள்ளது. டொலர் தேடிய பின்னர் இலங்கை வங்கியில் ரூபா இருக்கவில்லை. இதனையடுத்து, அமைச்சரவையின் ஊடாக நிதி அச்சிடுவதற்கான அனுமதியை பெற்றுக்கொண்டேன். அதற்கமையவே, தற்போது எரிபொருள் பெற்றுக் கொள்ளப்படுகின்றன. ரூபாவினால் எங்களுக்கு வருமானமில்லை. புதிய வரி மற்றும் மேலும் சில வரிகளும் அமுல்படுத்தப்படுவதால் வருட இறுதிக்குள் ரூபாவின் பற்றாக்குறையை தீர்ப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம். டொலர் பிரச்சினையை தீர்ப்பதற்கே சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்திவருகின்றோம். அந்த செயற்பாடுகள் ஜூலை மாத இறுதிக்குள் நிறைவடையும் என்றே எதிர்பார்க்கின்றோம்.

இதேவேளை, இந்தியாவிடமிருந்து மேலும் 500 மில்லியன் கிடைக்கவுள்ளது. இதற்கான பேச்சுவார்த்தைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதேவேளை ஐரோப்பிய நாடுகள், ரஷ்யா, ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகளுடனும் பேச்சுவார்த்தை நடத்த எதிர்பார்த்துள்ளோம்.

உலக நாடுகள் எமக்கு உதவுவதற்கு தயாராகவுள்ளன. ஆனால், எங்களால் ஏற்படுத்திக்கொண்ட பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்கான திட்டங்களை முன்வைக்க வேண்டும். நாங்களே எங்களுக்கு உதவினால் மற்றவர்களும் எங்களுக்கு உதவி செய்வார்கள். உலக நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி நிதியுதவிகளை பெற்றுக்கொண்டால் பொருளாதாரத்தை மீட்க முடியும்.

ஆனால், பிரச்சினைக்கு தீர்வு காணும் வரை பாதிப்புகள் மற்றும் துன்பங்களை பொறுமையாக ஏற்றுக்கொண்டுள்ள அனைத்து மக்களுக்கும் நான் நன்றி தெரிவிக்கின்றேன் - என்றார்.

## கந்தப்பளை காணி..

காணி ஊழலுடன் தொடர்புபட்டுள்ள நுவரெலியா பிரதேச சபைத் தலைவர் வேலு யோகராஜ் மீதான விசாரணை, கொழும்பில் அமைந்துள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைமையகமான சௌமியபவனில் கட்சியின் ஒழுக்காற்றுக் குழுவின் தலைவர் சட்டத்தரணி கா. மாரிமுத்து தலைமையில் இடம்பெற்றது.

காணி பெற்றுக்கொண்டதற்கான நோக்கம், அதன் பின்னணி, கடிதப் பரிமாற்றங்கள், அதன் பின்னரான நடவடிக்கைகள், அவற்றில் வேலு யோகராஜின் பங்கு ஆகியன குறித்து இதன்போது நான்கு மணித்தியாலங்கள் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த விசாரணையின்போது கந்தப்பளை காணி விவகாரம் தொடர்பில் வெளியாகியுள்ள தகவல்களின் உண்மைத்தன்மை குறித்தான பெரும்பாலான விடயங்களை பிரதேச சபைத் தலைவர் ஒப்புக்கொண்டுள்ளார் என அறிய முடிந்தது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் பதவியிலிருந்து வேலு யோகராஜை உடனடியாக இடைநிறுத்துவதற்கு விசாரணைகளின் முடிவில் தீர்மானிக்கப்பட்டது. மேலும், கட்சியின் உறுப்புரிமையிலிருந்து தற்காலிகமாக நீக்குவதற்கும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

இந்த இடைநிறுத்தமானது, எதிர்வரும் 21ஆம் திகதி முதல் அமுலுக்கு வருமென தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, தனது பக்க நியாயங்களை அறிக்கையிட்டு மேன்முறையீடு செய்வதற்கு 14 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

அவ்வாறு அவரால் மேன்முறையீடு செய்யப்படுமாயின் அது, கட்சியின் தேசிய சபையில் ஆராயப்பட்டு இறுதித் தீர்மானம் எடுக்கப்படுமென இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பெயர் குறிப்பிட விரும்பாத எம்.பி. ஒருவர் 'தமிழன்' நாளிதழிடம் தெரிவித்தார்.

மேற்படி ஒழுக்காற்று விசாரணையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் எம்.பி., தவிசாளர் மருதபாண்டி ராமேஷ்வரன் எம்.பி, தேசிய அமைப்பாளர் பழனி சக்திவேல், நிர்வாகப் பொறுப்பாளர் விஜி தொண்டமான், உப தலைவர்களில் ஒருவரான பாரத் அருள்சாமி ஆகியோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கடன் கையாள்கை தொடர்பில் இலங்கையுடன் பேச்சுவார்த்தை நடத்த சீன வங்கிகள் தயார்

## பிரதமருடனான கலந்துரையாடலில் தூதுவர் சென்ஹொங் தெரிவிப்பு



சீனத் தூதுவர் சியூ சென்ஹொங் மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் (14) கொழும்பில் இடம்பெற்றுள்ளது.

பிரதமருக்கும் சீனாவுக்கும் இடையிலான தொடர்ச்சியான உறுதியான ஆதரவை இந்த சந்திப்பு மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளதாக சீன தூதரகம் தெரிவித்துள்ளது. நாட்டில் தற்போதுள்ள நெருக்கடி நிலையில் இலங்கைக்கு சீனா மானியம், வர்த்தகம் மற்றும் முதலீடு போன்ற உதவிகளை வழங்கி வருகின்றது.

மேலும், சீன வங்கிகளும் கடன்களை சரியாக கையாள இலங்கையுடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாக சீன தூதரகம் குறிப்பிட்டுள்ளது. மேலும், இலங்கையின் வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு நெருக்கடி நிலைமையின் மத்தியில், கூட்டு முயற்சிகள் மற்றும் திட்டங்கள் முக்கிய பங்கு வகிப்பதாகவும் சீன தூதரகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதார மீட்சிக்கான உத்வேகத்தை உருவாக்குவதற்கு இரு தரப்பும் அவற்றின் கட்டுமானம் மற்றும் செயற்பாட்டிற்கு ஆதரவளிக்க வேண்டும் என்று பிரதமர் சீன தூதுவரிடம் ஒப்புக்கொண்டுள்ளார்.

# உணவுப் பொருட்களை பதுக்கும் செயற்பாட்டை தடுக்க புதிய சட்டம்

## வர்த்தக வங்கி பிரதிநிதிகளிடம் பிரதமர் தெரிவிப்பு





அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் சில்லறை வியாபாரிகள் எதிர்காலத்தில் உணவுப் பொருட்கள் பதுக்கி வைப்பதைத் தடுக்கும் வகையில் புதிய சட்டத்தை அரசாங்கம் அறிமுகப் படுத்தும் என்று பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

அரிசி ஆலை உரிமையாளர்கள் கோரிய கடன்கள் தொடர்பில் பிரதமர் ரணில் விக்ரம சிங்க நேற்று (15) வர்த்தக வங்கிகளின் பிரதிநிதி களை சந்தித்து கலந்துரையாடினார். இதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வங்கிகள் கோரிய கடன்களை போதிய அளவில் வழங்காத நிலையில், அரிசி கையிருப்பு பதுக்கி வைக்கப்படுவதாக வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ பிரதமரிடம் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் நிதிக் கொள்கைகளுக்கு இணங்க, இலங்கை வங்கிக் கடன்களை வழங்கு வதை உறுதிசெய்து, வங்கிகளின் கடன் கொள்கை களை கண்காணிக்குமாறு மத்திய வங்கி மற்றும் திறைசேரி அதிகாரிகளுக்கு பிரதமர் பணிப்புரை விடுத்தார்.

# விலங்கின நலன்பேணல் தொடர்பில் புதிய சட்டமூலம்

## கமத்தொழில் அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் விசேட கவனம்





நீண்ட ஆலோசனை செயல்முறையின் கீழ் அரசு, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் விலங்குகள் நலக் குழுக்களின் உதவியுடன் தயாரிக்கப்பட்ட உத்தேச விலங்கின நலன்பேணல் சட்டமூலம் தொடர்பில் கமத்தொழில், வனஜீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர தலைமையில் அண்மையில் கூடிய கமத்தொழில் அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

விலங்குகள் மீது அன்பு, கருணை மற்றும் உரிய கரிசனை காட்டுதல் மற்றும் விலங்குகளின் பாதுகாப்பு, நலன் மற்றும் நல்வாழ்வை உறுதிப்படுத்துதல் மற்றும் விலங்குகளுக்கு எதிரான கொடுமைகளிலிருந்து அவற்றைப் பாதுகாத்தல் என்பன இந்த சட்டமூலத்தின் பிரதான நோக்கமாகும் எனவும் இந்த சட்டமூலத்தின் ஊடாக முன்வைக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் மேலும் கவனம் செலுத்தி அது தொடர்பான திருத்தங்கள் காணப்படின் அவற்றையும் முன்வைக்குமாறு அமைச்சர் மஹிந்த அமரவீர குழுவில் கோரிக்கை விடுத்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தற்போதைய உணவு நெருக்கடிக்கு முகங்கொடுக்கும் வகையில் மக்கள் வீட்டுத்தோட்டம் செய்வதில் அதிக ஆர்வம் காட்டுவதால், மக்களை வீட்டுத்தோட்டம் செய்வதற்கு ஊக்குவிப்பதன் முக்கியத்துவம் மற்றும் அனைத்து அரசாங்க அலுவலகங்களிலும் நிலத்தை பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்துதல் என்பன தொடர்பிலும் குழுவில் கவனம் செலுத்தப்பட்டது. இந்த நடவடிக்கையை வெற்றிகரமாக்கிக்கொள்ள இராணுவம், சிவில் பாதுகாப்பு பிரிவு மற்றும் சுமார் 3 ஆயிரம் சிறைக்கைதிகளை பயன்படுத்த திட்டமிட்டுள்ளது. இதுதொடர்பில் மேலதிக கலந்துரையாடல் மேற்கொள்ளவுள்ளோம்.

கொழும்பு மாவட்டம் உட்பட சகல பிரதேசங்களிலுமுள்ள பயன்படுத்தப்படாத வயல் காணிகள், வயல் காணிகளை நிரப்பி கட்டடங்களை நிர்மாணித்தல் மற்றும் நீர்ப்பாசனப் பிரச்சினைகள் தொடர்பிலும் குழுவில் கவனம் செலுத்தப்பட்டது. அதற்கமைவாக மாவட்ட மட்டத்தில் குழுவொன்றை அமைத்து பயிரிடக்கூடிய வயல் காணிகள் மற்றும் பயிரிட முடியாத நிலங்கள் தொடர்பில் உரிய ஆவணமொன்றை தயாரிப்பது முக்கியமானது.

தரிசு நிலங்களில் விவசாயம் செய்வதற்கு கிராமப்புற மற்றும் நகர்ப்புற இளைஞர்களை ஊக்குவிப்பதன் முக்கியத்துவம் குறித்தும் குழுவில் கவனம் செலுத்தப்பட்டதுடன், அதற்கான முறையான திட்டத்தை தயாரித்து செயல்படுத்துவது குறித்து அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியதுடன், தற்பொழுது பயிரிடப்படாத நிலங்களில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள விவசாய ஆராய்ச்சி அதிகாரிகளின் உதவியை தொடர்ந்தும் வழங்க வேண்டும் என்று சுட்டிக்காட்டினார்.

எதிர்காலத்தில் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உரத்தை, நெல் மற்றும் சோளம் உற்பத்திக்கு ஜூலை மாதத்தில் வழங்குவது தொடர்பில் குழுவில் கவனம் செலுத்தப்பட்டதுடன், அந்த உரத்தை விநியோகிக்கும்போது திட்டமிட்ட அடிப்படையிலும் முக்கியத்துவ அடிப்படையிலும் விநியோக நடவடிக்கைகள் இடம்பெறுவதாகவும் அமைசச்சர் தெரிவித்தார்.

அறுவடை சேதம் தொடர்பில் குழுவில் கவனம் செலுத்தப்பட்டதுடன் இது தொடர்பில் சாதகமான அறிக்கையொன்று தயாரிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. விசேடமாக வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கையின்போது பொதுமக்களுக்கு பல்வேறு சிக்கல்கள் ஏற்படுவதால் நாடுதழுவிய ரீதியில் அவர்களுக்கு தேவையான அறிவுரைகளை வழங்குவதன் முக்கியத்துவம் மற்றும் அதற்காக அதிகாரிகளை வினைத்திறனான முறையில் ஈடுபடுத்துவது தொடர்பிலும் குழுவில் கவனம் செலுத்தப்பட்டது.

"தற்பொழுது பயிரிடப்படாத நிலங்களில் பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதற்கு சேர்ந்து பயிரிடுவோம் - நாட்டை வெல்வோம்" எனும் வேலைத்திட்டம் தொடர்பில் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் கவனத்துக்கு கொண்டுவருவதாகவும் இது தொடர்பில் யோசனைகளை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் காணப்படுவதாகவும் அமைச்சின் செயலாளர் குழுவில் தெளிவுபடுத்தினார்.

அமைச்சர் மஹிந்த அமரவீர தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கே. காதர் மஸ்தான், தாரக்க பாலசூரிய, சிவஞானம் சிறிதரன், மொஹமட் முஸம்மில், வீரசுமன வீரசிங்க, மதுர விதானகே உள்ளிட்ட அரச அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# அரசியல் செயற்பாடுகளால் 21ஆவது திருத்தம் ஆபத்தில்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சுட்டிக்காட்டு



நீதியமைச்சரின் 21ஆவது திருத்தம், அரசாங்கத்தின் 21ஆவது திருத்தம், எதிர்க்கட்சியின் 21ஆவது திருத்தம் என எதுவும் இல்லை. ரஞ்சித் மத்தும பண்டாரவினால் தனிநபர் பிரேரணையாக கொண்டு வரப்பட்ட 21ஆவது திருத்தம் மாத்திரமே தற்போதுள்ள ஒரே ஒரு திருத்தம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

மறுசீரமைப்புக்கான தேசிய இயக்கத்தின் பிரதிநிதிகள் குழுவினருடன் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று(15) இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயர்நீதிமன்றத்தின் தீர்மானம் இன்னும் சில தினங்களில் வெளியிடப்படும் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், நாடாளுமன்றத்தின் மூன்றாவது வாரத்தில் அது குறித்து விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளலாம்.

எவ்வாறாயினும், இந்நாட்டில் சீர்திருத்தங்களை விட அரசியல் விளையாட்டுகளால் மூழ்கியிருப்பதால் இது பற்றி விவாதிக்கப் படாத இரண்டாம் பட்ச கவனிப்பே இருக்கிறது. தற்போதைய அரசியல் நெருக்கடிக்கான தீர்வு புதிய மக்கள் ஆணையிலேயே தங்கியுள்ளது.

இந்நெருக்கடிக்கு சில மாதங்களில் தீர்வு இருப்பதாக சில வீரர்கள் பெருமை பேசினாலும் கூட, உண்மையான நிலைப்பாடு அவ்வாறு இல்லை.

புதிய சீர்திருத்தச் செயற்பாடுகளுக்கு சகல தரப்புகளினதும் யோசனைகள் இன்றியமையாதது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

# பெஸ்டியன் மாவத்தை பஸ் தரிப்பிடத்தில் எரிபொருள் நிரப்பு நிலையம் நிர்மாணம்





தனியார் பஸ்களுக்கு எரிபொருள் பெற்றுக் கொடுப்பதற்காக பெஸ்டியன் மாவத்தையிலுள்ள பஸ் தரிப்பிடத்தில் எரிபொருள் நிரப்பு நிலைய மொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதன் நிர்மாணப்பணிகள் நேற்று (15) காலை நிறைவடைந் திருந்தன.

எரிபொருள் எடுத்துச் செல்லும் புகையிரத தாங்கியொன்றை அமைத்து, அதனை அண்மித்து எரிபொருள் பம்பியொன்றும் பொறுத்தப் பட்டுள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டின் காரணமாக பஸ்களுக்கு எரிபொருள் பெற்றுக்கொள்வதில் சிக்கல்நிலை ஏற்பட்டுள்ளதுடன், அதுதொடர்பில் கவனம் செலுத்தி போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தனவின் அலோசனைக்கமைய இந்த எரிபொருள் நிரப்பு நிலையம் நிர்மாணிக்கப் பட்டுள்ளது. இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு, எரிபொருள் கூட்டுத்தாபனத்தி னால் நேரடியாக டீசல் பெற்றுக்கொடுக்கப்படும்.

# மன்னார் - மதவாச்சி பிரதான வீதியிலுள்ள லங்கா எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் பதுக்கல்!

## மக்கள் கடும் விசனம்

(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் - மதவாச்சி பிரதான வீதி, திருக்கேதீஸ்வர ஆலய நுழைவாயிலுக்கு அருகில் உள்ள லங்கா எரிபொருள் விற்பனை நிலையத்தில் நேற்று (15) பெற்றோல் கையிருப்பில் காணப்பட்ட போதும் வாகன உரிமையாளர்களுக்கு வழங்கப் படவில்லை என பாதிக்கப்பட்டவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.



நீண்ட நாட்களாக மன்னார் மாவட்டத்தில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களில் எரிபொருளுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டு வருகின்றது. இந்நிலையில், பெற்றோல் இல்லாத நிலையில் மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டிகளில் பயணிப்பவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் மன்னார் - மதவாச்சி பிரதான வீதி, திருக்கேதீஸ்வர ஆலய நுழைவாயிலுக்கு அருகிலுள்ள லங்கா எரிபொருள் விற்பனை நிலையத்தில் பெற்றோல் இருப்பதாக மக்கள் சென்றுள்ளனர். எனினும் பெற்றோல் வழங்கப்பட வில்லை.

இதன்போது எதற்காக பெற்றோலை வைத்துக் கொண்டு வழங்காமல் இருக்கின்றீர்கள் என மக்கள் கேட்ட போது பெற்றோலிய கூட்டுத்தாபனம் பெற்றோலை விநியோகிக்க வேண்டாம் என உத்தரவிட்டுள்ளதாக அங்கு கடமையாற்றிய ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

மக்கள் விசனம் தெரிவித்த நிலையில் அங்கிருந்து சென்றனர்.








எரிபொருள் கிடைக்காமையினால் சாரதிகள் சிலர் நேற்று (15) காலி வீதி, தெஹிவளை பிரதேசத்தை வழிமறித்திருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. (படப்பிடிப்பு – பிரதீப் தம்பரகே)

# சீனன்கோட்டை பாஸிய்யா ஜும்ஆ பள்ளிவாசலின் ஷாதுலிய்யா மனாகிப் மஜ்லிஸின் தமாம் சனியன்று

(பேருவளை நிருபர்)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பேருவளை சீனன் கோட்டை பாஸிய்யா பெரிய ஜும்ஆ பள்ளிவாசலில் 131ஆவது வருட ஷாதுலிய்யா மனாகிப் மஜ்லிஸின் தமாம் நிகழ்வு எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை மாலை அஸர் தொழுகையின் பின்னர் கலீபத்துஷ் ஷாதுலிகளான மௌலவி எம்.ஐ.எம். ரபீக் (பஹ்ஜி), எம்.எம். செய்னுல் ஆப்தீன் (பஹ்ஜி) ஆகியோர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

சீனன்கோட்டை பள்ளிச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் தமாம் மஜ்லிஸில் காலி ஷாலிய்யா அலிய்யா சட்டக்கல்லூரி பணிப்பாளர் கலீபத்துஷ் ஷாதுலி அலிய்யா மௌலவி எம். இஸட். ஸுஹ்ர் (பாரி), சீனன் கோட்டை பாஸிய்யா பெரிய பள்ளிவாசல் கதீப் மௌலவி அஷ்ஷெய்யித் அலவி மௌலானா (முர்சி) ஆகியோர் உரையாற்றவுள்ளதாக சீனன்கோட்டை பள்ளிச்சங்க இணைச் செயலாளர் அல்ஹாஜ் எம்.எம். சிஹாப் தெரிவித்தார். கடந்த 9ஆம் திகதி மனாகிப் மஜ்லிஸ் ஆரம்பமானதோடு உலமாக்களினால் மார்க்க உபன்னியாசங்களும் நிகழ்த்தப்பட்டது.



சீனன்கோட்டை பள்ளிச் சங்கத் தலைவர் ஏ.எச். எம். முக்தார் ஹாஜியாரின் வழிகாட்டலின்கீழ் இடம்பெறும் இம்மஜ்லிஸில் கலீபாக்கள், உலமாக்கள், முகத்தமீன்கள், இஹ்வான்கள் பங்குபற்றுவர்.

ஷாதுலிய்யாத் தரீக்காவின் ஸ்தாபகர் அல் குத்புல் அக்பர் இமாம் அபுல்ஹசன் அலியுஷ் ஷாதுலி (ரலி) அவர்களின் 850ஆவது ஜனன தினத்தை முன்னிட்டும் ஷாதுலிய்யா மஷாயி குமார்களின் ஞாபகார்த்தமாகவும் இம்மஜ்லிஸ் இடம்பெறவுள்ளது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஜூன் 16ஆம் திகதி, வியாழக்கிழமை

# சர்ச்சைக்குரிய பேச்சுகளும் பாதிக்கப்படும் மக்களும்!

நாடு மிக மோசமான நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதுடன், மக்கள் பெரும் இன்னல்களை சந்தித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினை இப்போதைக்கு தீராது எனத் தெரிந்தும் நன்மை நடக்கும் என்ற ஏதோவொரு எதிர்பார்ப்பு இருக்கத்தான் செய்கிறது.

இலங்கை மீது அக்கறைகொண்ட வெளிநாடுகள் அல்லது வெளிநாட்டு தனவந்தர்கள் மூலமாக மாற்றம் நிகழ்ந்துவிடாதா என்று பாதிக்கப்பட்டுள்ள மக்கள் நாட்களை நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில், மக்களுக்கு இருக்கும் சிறு நம்பிக்கையையும் தவிடுபொடியாக்கும் அளவுக்கு தவறான இராஜதந்திர நகர்வுகள் நாட்டில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றமை கவலையளிக்கிறது.

இலங்கை மின்சார சபையின் தலைவராக இருந்த எம்.சி.சி. பெர்டினாண்டோவின் சர்ச்சைக்குரிய கருத்தால் இந்தியாவுடனான இராஜதந்திர உறவை சிக்கலுக்குள்ளாக்கும் நிலை உருவாகியுள்ளது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் நிர்ப்பந்தத்தால் அதானி குழுமத்திடம் மின் திட்டத்தை ஒப்படைக்க வேண்டுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பெர்டினாண்டோ கோப் குழுவில் கருத்து வெளியிட்டிருந்தார். இந்த சர்ச்சைக்குரிய கருத்து அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதனையடுத்து அதனை முற்றாக மறுப்பதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிக்கை வெளியிட்டிருந்தார். அதன் பின்னர் தனது கருத்துக்கு மன்னிப்புக் கோரிய பெர்டினாண்டோ, எதிர்பாராத அழுத்தம் மற்றும் உணர்வுகளின் காரணமாக 'இந்தியப் பிரதமரால் வலியுறுத்தப்பட்டது' என்ற வார்த்தைப் பிரயோகத்தை வெளிப்படுத்த நான் நிர்ப்பந்திக்கப்பட்டேன். இது முற்றிலும் தவறானது எனத் தெரிவித்ததுடன், பதவியையும் இராஜினாமா செய்தார்.

இந்த விடயம் உள்நாட்டு அரசியலில் பேசுபொருளாக மாறியது. வடக்கில் காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்தை இந்தியாவுக்கு வழங்குவது தொடர்பில் ஜனாதிபதி தன்னிடம் ஆலோசனை நடத்தியதாகவும், அதனை முன்னெடுப்பதற்குரிய பங்களிப்பை வழங்குமாறும் மின்சார சபைத் தலைவராக இருந்தபோது பெர்டினாண்டோவால் ஜனாதிபதியின் செயலாளருக்கு அனுப்பப்பட்ட கடிதம் தொடர்பிலும் தகவல்கள் வெளியாகின.

இவ்வாறானதொரு பின்னணியில், இலங்கையில் காற்றாலை மின்னுற்பத்தியைப் பெற இந்தியப் பிரதமர் இலங்கை ஜனாதிபதிக்கு அழுத்தங்களை பிரயோகித்ததாக எம்.சி.சி. பெர்டினாண்டோ தெரிவித்த சர்ச்சைக்குரிய கருத்தையடுத்து இந்தியாவின் முன்னணி நிறுவனமான அதானி குழுமம், இலங்கையில் செய்யப்படும் முதலீட்டுத் திட்டங்களை மீள்பரிசீலனை செய்ய ஆரம்பித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அதானி குழுமத்தின் இலங்கைக்கான முதலீடுகளை தக்கவைத்துக்கொள்ள இலங்கை அரசாங்கம் இராஜதந்திர மட்டத்தில் செயற்பட்டு வருகின்ற போதிலும் அது முன்னேற்றத்தைத் தரவில்லையெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கை எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக அநேகமான நாடுகள் இலங்கைக்கு உதவுவதற்கான கோரிக்கையை நிராகரித்துள்ளதாக மாலைதீவுகளின் முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீட் தன்னிடம் குறிப்பிட்டதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா கருத்து வெளியிட்டிருந்தார். இலங்கைக்கு உதவும் நட்பு நாடுகளை ஒன்றிணைப்பதற்காக பிரதமர் ரணில் விக்ரமசிங்கவினால் மாலைதீவுகளின் முன்னாள் ஜனாதிபதியும், அந்நாட்டின் தற்போதைய சபாநாயகருமான மொஹமட் நஷீட் நியமிக்கப்பட்டிருந்தார். இவ்வாறானதொரு பின்னணியிலேயே ஹர்ஷ டி சில்வா எம்.பி. சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்டிருந்தார்.

சவூதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம், ஜப்பான் உள்ளிட்ட நாடுகளே இலங்கைக்கு உதவிசெய்ய மறுப்பதாக அவர் கூறியிருந்தார். ஆயினும், அந்தக் கூற்றுக்கு நஷீர் அஹமட் மறுப்பு தெரிவித்துள்ளார்.

நாடு ஆபத்துக் கடலில் மிதந்துகொண்டிருக்கிறது. காப்பாற்றுவதற்கு அண்டை நாடுகளினதும் ஏனைய நாடுகளினதும் உதவி மிக அத்தியாவசியமானதாகும். காலம் தாழ்த்தப்படுமானால் இலங்கையில் பேரழிவு இடம்பெறுவதை தவிர்க்க முடியாது.

இப்படியான சூழல் நாட்டில் உள்ளதென்பதை பொதுமக்கள் நன்கு அறிந்திருக்கிறார்கள். ஆனால், அரசியல்வாதிகளும், உயர் அதிகாரிகளும் அறிந்திருக்கிறார்களா என்ற கேள்வி எழுகிறது. அவர்கள் பணம் படைத்தவர்கள். எரிவாயு, எரிபொருளுக்காக வரிசையில் நிற்க மாட்டார்கள். அத்தியாவசியப் பொருட்களுக்காக கையேந்தமாட்டார்கள் என்பதால் அசட்டையாக இருந்துவிடுகிறார்களா?

இங்கே, தனிப்பட்ட முரண்பாடுகள், கோபதாபங்கள் அவசியமில்லை. நாட்டின் முன்னேற்றத்துக்காக விட்டுக்கொடுப்புடன் செயற்பட வேண்டியதே தேவையாகும். சர்வதேச உறவுகளைத் தவிர்த்துவிட்டு இலங்கையால் எதுவும் செய்ய முடியாது என்பதை எப்போது இவர்கள் புரிந்துகொள்ளப்போகிறார்கள்?

# சைவத்துக்கு மாற விரும்புவோர் கவனிக்க வேண்டிய 5 முக்கிய விடயங்கள்



அதிகப்படியான உடல் கொழுப்பைக் குறைக்க, மருத்துவ சிகிச்சைக்காக அல்லது உடல் எடையைக் குறைக்க என பல்வேறு காரணங்களால் ஒருவர் அசைவ உணவிலிருந்து சைவத்துக்கு மாற விரும்பலாம்.

இவையல்லாமல், நாம் வாழும் சுற்றுப்புறத்துக்கு ஏற்பவும், பணியிடங்களுக்கு ஏற்பவும் கூட ஒருவர் அசைவத்தை கைவிட நினைக்கலாம்.

காரணம் எதுவாக இருந்தாலும். அசைவத்திலிருந்து சைவத்துக்கு மாற விரும்புவோர் நிச்சயம் இந்த முக்கியமான விடயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

### 1.படிப்படியாகத் தொடங்கலாம்

எடுத்த எடுப்பிலேயே அசைவ உணவுகளைக் கண்டும் காணாமல் போய்விட முடியாது. கூடவும் கூடாது. வாரத்தில் ஒரு நாள் நிச்சயம் அசைவம் இல்லை அல்லது வாரத்தில் இந்த நாட்களில் மட்டும் அசைவம் கிடையாது என்று ஆரம்பிக்கலாம். அப்படியே அசைவத்தை விட்டுவிடும் நாட்களில் உங்களுக்கு மிகவும் பிடித்த காய்கறிகளை சாப்பிடுங்கள்.

எதுவாக இருந்தாலும் உங்களை வருத்திக் கொள்ளாமல், பிடித்த வழக்கத்தில் செயற்படுத்துங்கள்.

### 2. அசைவம் அதிகம் விரும்புபவராக இருந்தால்

அசைவ உணவை அதிகம் விரும்பி சாப்பிடுபவராக இருந்தால், அதனை ஒரேயடியாகக் கைவிடத் தொடங்கும்போது, மிகவும் ருசியான சைவ உணவுகளைத் தேடித் தேடி சாப்பிட வேண்டும். பார்க்கும்போதே வாய் ஊறும் உணவுகளைத் தேடி அது எங்கு கிடைக்கும் என்று பார்த்து பார்த்து தேடிச் சென்று சாப்பிடுங்கள். இது அசைவ உணவின் மீதான விருப்பத்தை திசை மாற்ற உதவும். ஆனால், பழைய உணவுகளும் உங்கள் தட்டில் இருப்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள்.

### 3. தேடுங்கள்.. தேடுங்கள்..

அசைவ உணவுகளைப் போன்றே சுவை தரும் சில உணவுகள் உள்ளன. அவற்றைப் பற்றி நண்பர்களிடம் அல்லது இணையத்தில் தேடி கண்டுபிடித்து வைத்துக் கொள்ளுங்கள். எப்போதாவது உங்களுக்கு மிகவும் பிடித்த அசைவ உணவை சாப்பிட வேண்டும் என்றால், அதற்கு இணையான சுவை கொண்ட உணவுகளை வரவழைத்து சாப்பிடலாம். உங்களுக்கு அதில் மிகவும் பிடித்த உணவு கிடைக்கும் வரை அசைவ உணவுகளுக்கு இணையான ருசி கொண்ட உணவுகளைத் தேடுங்கள்.

### 4. புரதத்தை சமன் செய்ய வேண்டும்

கறி மற்றும் அசைவ உணவுகளை சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்கள், திடீரென காய்கறிக்கு மாறும்போது ஏற்படும் புரத இழப்பை சமன் செய்ய வேண்டும். அதற்கு புரதம் அதிகம் நிறைந்த உணவுகளை எடுத்துக் கொள்ள வேண்டும். கறுப்பு பீன்ஸ், தினை, முட்டை, சீஸ், பருப்பு வகைகள், விதைகள் போன்றவற்றை உணவில் சேர்த்துக் கொள்ள மறக்கக் கூடாது.

### 5. எப்போதும் காலியாக விடாதீர்கள்

காய்கறிகள், சைவ உணவுப் பொருட்கள், துரித உணவு பொருட்கள் வாங்கி வைக்கும் அலமாரிகளை எப்போதும் காலியாக வைக்காதீர்கள்.

உங்களுக்குப் பிடித்த காய்கறிகளை தேவையான அளவுக்கு வாங்கி நிரப்பி வையுங்கள். எப்போது பசித்தாலும் எதுவும் இல்லை என்று நினைக்காத வகையில், சைவ உணவுகள், அதுவும் உங்களுக்குப் பிடித்த உணவுகள் எப்போதும் இருக்குமாறு அமைத்துக் கொள்ளுங்கள். எனவே, அசைவ உணவிலிருந்து சைவத்துக்கு மாறுவது என்பது அவ்வளவு கடினமான விடயம் ஒன்றும் இல்லை. மனம் இருந்தால் வழியும் இருக்கிறது.

# பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்கவேண்டிய 15 அம்சங்கள்



திருமணத்தை செய்து பார், வீட்டைக் கட்டிப்பார் என்பது பழமொழி. தற்போதெல்லாம் பிள்ளைகளை பாடசாலையில் சேர்த்துப்பார், அவர்களை வளர்த்துப்பார் என்பது தற்போதைய தலைமுறையினரின் புதுமொழியாகிவிட்டது.

பிள்ளைகள் வளர்ப்பு என்பது மிகவும் சவாலானதாக மாறிவிட்டது. முன்பெல்லாம் பெற்றோர் இப்படியா பிள்ளைகளை வளர்த்தார்கள்? மிகப்பெரிய குடும்பத்தில் பல விடயங்களை பார்த்தும், சில விடயங்களை பார்க்காமலும் அவர்களாகவே வளர்ந்து விட்டிருப்பார்கள்.

ஆனால், இப்போதோ பிள்ளைகள் வீடு, பாடசாலை என நான்கு சுவர்களுக்குள்ளேயே இருப்பதால் அவர்களை வளர்க்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

அப்படி நாம் சரியான முறையில் பிள்ளைகளை வளர்த்திருக்கிறோமா என்று கேட்டால் பல பெற்றோருக்கும் குழப்பம் ஏற்படும்.

சரி, பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்க வேண்டிய முக்கியமான 15 விடயங்களை கற்றுக் கொடுத்திருக்கிறீர்களா அல்லது கற்றுக் கொடுக்க தயாராக இருக்கிறீர்களா என்பதை இங்கே பார்க்கலாம்.

அவர்கள் தங்களது சின்ன சின்ன வேலைகளை அவர்களாகவே செய்துகொள்ள பழக்கப்படுத்த வேண்டும்.

ஆண் பிள்ளையாக இருந்தாலும் சரி, பெண் பிள்ளையாக இருந்தாலும் சரி எந்த வித்தியாசமும் இல்லாமல் வீட்டு வேலைகளை தாயுடன் பகிர்ந்து செய்ய அறிவுறுத்த வேண்டும்.

குழுவுடன் இணைந்து விளையாட பழக்க வேண்டும். தற்போதைய பிள்ளைகளுக்கு நண்பர்களுடன் சேர்ந்து விளையாடத் தெரிவதில்லை. தாங்கள் தோற்கவே கூடாது என்ற மனநிலைதான் அதற்குக் காரணமாக இருக்கிறது. அதை மாற்ற வேண்டும்.

எப்போதும் தம்மை சுத்தமாக வைத்துக் கொள்ள பழக்க வேண்டும். இது எப்போதும் முக்கியமான விடயமாக இருக்கும்.

தங்களுக்கு ஏற்படும் உணர்வை வெளிப்படுத்த சொல்லிக் கொடுங்கள். அன்பு, காதல், நன்றி என எல்லா உணர்வுகளையும் வார்த்தைகளால் வெளிப்படுத்த சொல்லிக் கொடுக்க வேண்டும்.

ஆரம்பத்தில் புத்தகம் படிக்க, கதைகள் கேட்க பிள்ளைகள் விரும்புவார்கள். அதனை பெற்றோர் ஊக்குவித்து பிள்ளைகளுக்கு படிக்கும், கேட்கும் பழக்கத்தை உருவாக்கிட வேண்டும்.

மன்னிப்புக் கேட்கும் தைரியத்தை வளர்க்க வேண்டும். மன்னிப்புக் கேட்க எதற்கு தைரியம் என்கிறீர்களா? நிச்சயம் ஒரு தவறை தான் செய்துவிட்டதாக ஒப்புக் கொண்டு மன்னிப்புக் கேட்க தைரியம் வேண்டும். மன்னிப்புக் கேட்பது நல்ல குணம். தவறு செய்திருப்பது தெரிந்தால் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்ற குணத்தை வளர்த்தெடுங்கள். நல்லது எது, கெட்டது எது என்று அவர்களாகவே கற்றறியும் நிலைக்குக் கொண்டு வாருங்கள். எப்போதும் அவர்களை நீங்களே வழி நடத்தாமல், அவர்கள் தவறு செய்யும்போது அதை எப்படி உணர்கிறார்கள் என்பதை அவர்கள் போக்கில் விட்டுப் பாருங்கள். ஆனால், அவர்களை கவனியுங்கள்.

எங்கே விழுந்தாலும் ஓடிச் சென்று தூக்கி விடும் பெற்றோராக இருக்காதீர்கள். விழுந்தால் அவர்களாகவே எழும் திறன் அங்கிருந்துதான் வளரும். எனவே, எந்த தோல்வி வந்தாலும் உடனே எழும் பக்குவம் கிடைக்கும்.

முதல் அடியை எடுத்து வைக்க பழக்குங்கள். எங்கு இருந்தாலும் "யாராவது?" என்று ஒரு கேள்வி வரும் போது "நான்" என்று கையை தூக்கும் முதல் ஆளாக நம் பிள்ளை இருக்க வேண்டும் என்பதை அறிவுறுத்துங்கள்.

மற்றவர்களிடம் பேசுவதற்கு பயிற்சி கொடுங்கள். யாரிடமும் எந்த கூச்சமும் இன்றி மிக எளிதாக பழக, பேச பழக்கப்படுத்துங்கள்.

வாக்குவாதம் செய்ய அனுமதியுங்கள். அவர்களது கருத்துகள், விமர்சனங்களை காது கொடுத்து கேளுங்கள். மற்றவர்களின் கருத்துகளையும் கேட்க வேண்டும் என்று புரிய வையுங்கள்.

எப்போதும் நேர்மறை எண்ணங்களை கொண்டிருக்க வேண்டும் என்பதை புரிய வைக்கவும். என்ன நடந்தாலும் அதில் ஒரு நல்லது இருக்கும் என்பதை உணர்ந்து கொண்டு செயற்பட உங்கள் அனுபவங்களை அவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

இந்த சுற்றுச்சூழலுக்கு சிறந்த மனிதனாக இருந்து, உலகைக் காக்க வேண்டும் என்பதை சொல்லி வளர்க்கலாம். இன்றைய குழந்தைகளே நாளைய தலைமுறை.

சிக்கனம், சேமிப்பு, செலவு போன்றவற்றை மிக எளிதாகக் கற்றுக் கொடுக்கலாம். சின்ன சின்ன செலவுகளை அவர்களே செய்ய வைத்து அது குறித்த அனுபவத்தை அவர்களுக்குக் கொடுக்கலாம்.

எனவே, பிள்ளைகள்தானே இப்போது என்ன தெரியும் என்றில்லாமல், அவர்களை சிறந்த மனிதர்களாக உருவாக்க நிச்சயம் இதை பெற்றோர் கடைப்பிடிக்க வேண்டும்.

## நக்கல் நமசிவாயம்

இலங்கையை கட்டியெழுப்ப அமெரிக்கவும், சீனாவும் ஒண்டா வேலை செய்யப்போறாங்களாம்..! ஆனானப்பட்ட அவங்களே ஒண்டு சேருறாங்கள்..! எங்கட நாட்டு அரசியல் கட்சிகள் இன்னும் அடிச்சுப்பிடிச்சு பிரிஞ்சுபோய் நிக்கிறாங்கள்..!



## இன்றைய நாளில்...

- 1903 – போர்ட் வாகன நிறுவனம் நிறுவனமயப்படுத்தப்பட்டது.
- 1911 – ஐ.பி.எம். நிறுவனம் நியூயோர்க்கில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1958 – 1956 ஹங்கேரியப் புரட்சியில் ஈடுபட்ட தலைவர்கள் தூக்கிலிடப்பட்டனர்.
- 1963 – ரஷ்யாவின் வலன்டீனா டெரெஷ்கோவா விண்வெளிக்குச் சென்ற முதல் பெண் என்ற பெருமையைப் பெற்றார்.
- 1976 – தென்னாபிரிக்காவின் சுவெட்டோவில் 15 ஆயிரம் கறுப்பின மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 566 மாணவர்கள் கொல்லப்பட்டனர்.
- 2010 – பூட்டான் புகையிலைப் பயன்பாட்டை முற்றாகத் தடைசெய்த முதலாவது நாடானது.
- 2012 – ஐக்கிய அமெரிக்க வான்படையின் தானியங்கி போயிங் எக்ஸ்-37 விண்ணூர்தி, 469 நாட்கள் பயணத்தின் பின்னர் பூமி திரும்பியது.
- 2012 – சீனா, சென்சூ-9 விண்கலத்தை லியு யங் என்ற பெண் உட்பட மூவருடன் வெற்றிகரமாக ஏவியது.

# எத்தனோல் இறக்குமதி விபரங்கள் அடங்கிய அறிக்கையை இரு வாரங்களில் சமர்ப்பிக்குக!

## இறக்குமதி, ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்துக்கு கோபா குழு பணிப்பு

## சீனி இறக்குமதி கட்டுப்பாடு தொடர்பில் எதிர்வரும் 21இல் விசேட கலந்துரையாடல்





நாட்டில் பயன்படுத்துவதற்காக இறக்குமதி செய்யப்படும் எத்தனோலின் அளவு மற்றும் இறக்குமதி செய்யும் நிறுவனங்களுக்கு முறையான கட்டுப்பாடுகள் இல்லாமை குறித்து அண்மையில் நடைபெற்ற அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவில் (கோபா) விசேட கவனம் செலுத்தப்பட்டது.

பல்வேறு நிறுவனங்களால் நாட்டிற்குள் எத்தனோல் இறக்குமதி செய்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் நடைமுறைகள், ஒவ்வொரு நிறுவனங்கள் பற்றிய தகவல்கள், நிறுவனங்களாலும் இறக்குமதி செய்யப்பட்ட எத்தனோல் தொகை உள்ளடங்கிய அறிக்கையை இரண்டு வாரங்களுக்குள் தம்மிடம் சமர்ப்பிக்குமாறு இறக்குமதி, ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு அரசாங்க கணக்குகள் பற்றிய குழு பணிப்புரை விடுத்தது. அத்துடன், மதுபான உற்பத்தி தவிர ஔடதங்கள் உள்ளடங்களாக ஏனைய உற்பத்திகளை மேற்கொள்ள இறக்குமதி செய்யப்படும் எத்தனோலின் அளவு, அவற்றுக்கு எத்தனோல் உரிய முறையில் பயன்படுத்தப்படுகின்றதா என்பது குறித்தும் கவனத்தில் எடுக்க வேண்டும் என இங்கு வலியுறுத்தப்பட்டது.

அத்துடன், இலங்கைக்கு வாகனங்கள் மற்றும் வாகன உதிரிப்பாகங்கள் இறக்குமதி செய்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்குவது தொடர்பிலும் குழு கேள்வியெழுப்பியதுடன், அதற்கான நடைமுறைகளை தயாரிப்பதற்கு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துடன் இணைந்து பொறிமுறையொன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கடந்த காலங்களில் வலியுறுத்தப்பட்டிருந்தபோதும், சரியான நடவடிக்கைகள் எடுக்காமை தொடர்பில் குழு அதிருப்தியை வெளியிட்டது.

உரிய செயற்பாடுகளை மிகவும் வினைத்திறனுடனும், வெளிப்படைத்தன்மையுடனும் பேணுவதற்கு பொருத்தமான பொறிமுறையொன்றைத் தயாரித்து நான்கு மாதங்களுக்குள் குழுவிடம் சமர்ப்பிக்குமாறும் மேலும் அறிவிக்கப்பட்டது.

இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் செயற்பாடுகளை உரிய தரத்தில் முன்னெடுத்துச் செல்ல சரியான கணினிக் கட்டமைப்பொன்று இல்லாமை தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது. திணைக்களத்தின் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும் போது கலால் திணைக்களம், மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம், இலங்கை சுங்கம் போன்று நேரடியாகத் தொடர்புபட்ட நிறுவனங்களுடன் இணைந்து செயற்படாமை சிக்கலுக்குரியது என அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு சுட்டிக்காட் டியதுடன், கணினி வலையமைப்பை விரைவில் நடைமுறைப்படுத்துவதற்கு உரிய செயற்பாடுகளை முன்னெடுக்குமாறும் வலியுறுத்தியது.

இதற்காக, இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு போன்ற நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்தும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது. இவ்விடயம் தொடர்பில் 2016ஆம் ஆண்டு இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் இதுவரையில் இப்பணிகள் மேற்கொள்ளப்படாமை குறித்து அதிருப்தி வெளியிட்ட குழு, இதன் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு முன்னேற்றம் குறித்து ஆராய்வதற்கு குழுவின் தலைவர் உப குழுவொன்றையும் நியமித்தார்.

அத்துடன், வரிச்சலுகை அடிப்படையில் இறக்குமதி செய்யப்படும் வாகனங்களை 05 வருடங்கள் முடியும் வரை வேறு தரப்பினருக்கு மாற்ற முடியாது என அதிகாரிகள் குழுவிடம் தெரிவித்தனர்.

அவ்வாறு மாற்றம் செய்யப்பட்டு 5 வருடங்கள் கடந்த பின்னரும், உரிய வாகனங்களின் சாதாரண வரிப் பெறுமதியை மீளப்பெறுவதற்குத் தேவையான நடைமுறைகள் வகுக்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். சலுகை அடிப்படையில் இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கான உரிமங்களை முறையாகப் பின்தொடர்தல் மற்றும் ஒழுங்குபடுத்தலின் முக்கியத்துவத்தையும் குழு வலியுறுத்தியது.

2015 செப்டெம்பர் 21ஆம் திகதி 1933/13ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய உரிமைப்பத்திர கட்டுப்பாட்டின் கீழ் உள்ள வாகனங்களுக்கான வர்த்தமானி அறிவித்தல், அபிவிருத்தி உத்திகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மற்றும் இராஜாங்க அமைச்சரினால் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளருக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைய, 2017ஆம் ஆண்டு 33 பயன்படுத்தப்பட்ட மோட்டார் வாகனங்களுக்கு பிழையான சுங்க இணைப்பு இலக்கங்கள் வழங்கப்பட்டமையால் 114.6 மில்லியன் ரூபா சுங்க வரி இழப்பு ஏற்பட்டமை குறித்தும் குழு விசாரணை நடத்தியது. அதன்படி முழுமையான விசாரணை குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டதுடன், இவ்விடயத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் தொடர்பில் 02 வாரங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் குழுவின் தலைவர் பணித்தார்.

அத்துடன், சீனி கிலோவொன்றுக்கு அறவிடப்படும் விசேட வரியை 50 ரூபாவிலிருந்து 25 சதமாகக் குறைத்ததன் ஊடாக எதிர்பார்த்த நன்மை நுகர்வோரை சென்றடையாமை குறித்து ஆராய்வதற்கான விசேட கணக்காய்வு அறிக்கை தொடர்பிலும் குழுவின் கடந்த அமர்வில் கலந்துரையாடப்பட்டிருந்தது. சீனி இறக்குமதிக்காக அனுமதிப்பத்திரம் வழங்கும் முறைமையொன்றை அறிமுகப்படுத்தல் மற்றும் சீனி இறக்குமதியைக் கட்டுப்படுத்த அவசியமான அளவுகோல்களை அறிமுகப்படுத்தாமை குறித்து எதிர்வரும் 21ஆம் திகதி குழு கலந்துரையாடவுள்ளது.

இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான லசந்த அலகியவண்ண, திஸ்ஸ அத்தநாயக்க, துமிந்த திசாநாயக்க, உதய கம்மன்பில, (வைத்திய கலாநிதி) சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே, மொஹமட் முஸம்மில், நிரோஷன் பெரேரா, அசோக் அபேசிங்க, வீரசுமண வீரசிங்க, ரஞ்சித் மத்தும பண்டார, பி.வை.ஜீ. ரத்னசேகர, (வைத்திய கலாநிதி) உபுல் கலப்பத்தி ஆகியோருடன், அரசாங்க அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

## இலங்கை மின்சார திருத்தச் சட்டமூலம் அமுல்



2009ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க, இலங்கை மின்சார சட்டத்தினைத் திருத்துவதற்கான இலங்கை மின்சார திருத்தச் சட்டமூலத்தில் நேற்று (15) தனது கையொப்பத்தையிட்டு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சான்றுரைப் படுத்தினார்.

இந்தச் சட்டமூலம் அண்மையில் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

மின்சாரப் பிறப்பாக்கத்திற்கு விலைகோரும் நடைமுறையொன்றில் பங்குபற்றுவதற்கு எவரேனும் இதன் மூலம் அனுமதிக்கப்படுவார். அதற்கமைய 25 மெகாவோட் மின்சாரப் பிறப்பாக்கக் கொள்வனவுக்கு மேலாக மின்சாரப் பிறப்பாக்கத்திற்கு பிறப்பாக்கும் உரிமையொன்றை வழங்குவதற்காக விண்ணப்பிப்பதற்கு தடையாகவிருப்பதற்கு ஆளொருவர் மீது விதிக்கப்பட்ட மட்டுப்பாட்டை இல்லாதாக்குவதற்கும் பிறப்பாக்கக் கொள்ளளவின் மீதான ஏதேனும் வரையீடின்றி அதற்காக விண்ணப்பிப்பதற்கும் அனுமதிப்பதும் இதன் ஊடாக இடம்பெறும்.

இதற்கமைய நேற்று (15) முதல் இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டம் 2022ஆம் ஆண்டு 16ஆம் இலக்கச் சட்டமாக இலங்கைச் சட்டக் கட்டமைப்பில் இணைந்துகொள்கிறது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

### 15.06.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 132 7446 | 144 2030 |
| கனேடியன் டொலர் | 161 4440 | 174 88 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 40 8481 | 44 54 |
| யூரோ | 258 1344 | 273 2511 |
| ஜப்பான் யென் | 1 5032 | 1 6144 |
| சிங்கப்பூர் டொலர் | 142 73 4 | 153 4851 |
| ஸ்ரேலிங் பவுன் | 314 242 | 331 5170 |
| சுவிஸ் பிராங் | 242 4174 | 258 24 0 |
| ஐ.அ.டொலர் | 244 6 63 | 255 4 54 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 843 3602 |
| குவைட் | குவைட் தினார் | 0,06 616 |
| ஓமான் | ஓமான் றியால் | 823 5521 |
| கட்டார் | கட்டார் றியால் | 87 4401 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 84 8003 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 86 86 3 |

## சமாதான நீதவான்

(பீ.எம் முக்தார்)



பேருவளை, மருதானை அரப் வீதியைச் சேர்ந்த முஹம்மட் ஸஹீத் அப்துல் பாக்கி (பாக்கிர் ஹாஜியார்) இளம் சட்டத்தரணி நாமிக் நபாத்தின் சிபாரிசின் பேரில் முன்னாள் நீதியமைச்சர் அலி சப்ரியினால் நாடு முழுவதற்குமான சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் களுத்துறை நீதிமன்ற மேலதிக மாவட்ட நீதவான் சம்பத் கமகே முன்னிலையில் அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

பேருவளை, மருதானை பகுதியில் பிரபல சமூக சேவையாளரான இவர் பேருவளை அப்ரார் கல்வி நிலையம், களுத்துறை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளன உறுப்பினராகவும் பதவிவகித்து வருகிறார்.

இலங்கையின் முதலாவது பள்ளிவாசலான வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மருதானை மஸ்ஜிதுல் அப்ரார் பள்ளிவாசல் மற்றும் மருதானை ஷாதுலிய்யா ஸாவிய்யா ஆகியவற்றின் தர்ம கர்தாவாகவும் 10 வருடங்களுக்கு மேல் பதவி வகித்துள்ளார்.

முன்னாள் சபாநாயகர் தேசமான்ய எம்.ஏ. பாக்கிர் மாக்கார், நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார், அப்ரார் பள்ளிவாசல் ஜமாத் சபைத் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஏ.எம். ஹனபி, பேருவளை நகரபிதா மஸாஹிம் முஹம்மத் ஆகியோருடன் இணைந்து பிரதேசத்தின் கல்வி, சமய, சமூக, அபிவிருத்தி மேம்பாட்டிற்காக உழைத்துள்ளார். இலங்கையின் முதலாவது முஸ்லிம் மகளிர் கல்லூரியான மருதானை அல் -பாஸியதுல் நஸ்ரிய்யா மகளிர் கல்லூரி, மாளிகாஹேனை ஸேம் ரிபாய் ஹாஜியார் தேசிய பாடசாலை ஆகியவற்றின் பழைய மாணவரான இவர் மர்ஹூம்களான முஹம்மத் ஸஹீத் -பக்கிர் உம்மா தம்பதிகளின் இளைய புதல்வராவார்.

## பேருவளையில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கை



(பீ.எம் முக்தார்)

பேருவளை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இப்பிரதேசத்தில் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் டெங்கு ஒழிப்பு முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இவ்வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாக பேருவளை மரக்கலாவத்தை, பெருகமலை பகுதியில் உள்ள வீடுகளில் மற்றும் வெற்றுக் காணிகளில் தேங்கியுள்ள பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன்களை அகற்றும் பணி நேற்று (15) முன்னெடுக்கப்பட்டது. மக்கொனை பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஓமேகாவின் வழிகாட்டலின் கீழ் பேருவளை பிரதேச சபையின் உழவு இயந்திரம் மூலம் இவை எடுத்துச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பிரச்சினைகள் குறித்து மனித உரிமைகள் பேரவையின் தலைவருக்கு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் விளக்கம்



மனித உரிமைகள் பேரவையின் 50ஆவது கூட்டத்தொடரின் பக்க அம்சமாக, மனித உரிமைகள் பேரவையின் தலைவர் மற்றும் அணிசேரா இயக்கத்தின் (ஜெனீவா அத்தியாயம்) ஒருங்கிணைப்பாளரை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் சந்தித்திருந்தார். இந்நிலையில், நேற்று முன்தினம் (14) ஜெனீவாவில் வைத்து பிரேஸிலுடன் இருதரப்பு சந்திப்பொன்றில் ஈடுபட்டிருந்தார்.

மனித உரிமைகள் பேரவையின் தலைவரும் அர்ஜென்டினாவின் நிரந்தரப் பிரதிநிதியுமான ஃபெடரிகோ வில்லேகாஸ் உடனான சந்திப்பின் போது, இலங்கையின் தற்போதைய சமூகப் பொருளாதார நிலைமை மற்றும் சர்வதேச சமூகத்தின் பச்சாதாபம் மற்றும் புரிதலின் அவசியம் குறித்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் விளக்கினார். நாடு ஏராளமாகப் பெற்று வரும் மகத்தான பிரதிபலிப்பு மற்றும் உதவிக்கு அவர் பாராட்டு தெரிவித்தார். தற்போதைய சமூகப் பொருளாதார பிரச்சினைகளை சமாளிப்பதற்கான அவசியத்தை வலியுறுத்திய அதேவேளையில், கடமைகளை சமாளித்து முன்னேறுவதற்கான அரசியல் விருப்பத்தையும் உறுதியையும் அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

இந்த வகையில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சட்டம், அரசியலமைப்பு சீர்திருத்தங்கள், நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ள 21ஆவது திருத்தம், சுயாதீன ஆணைக்குழுக்களை வலுப்படுத்துதல், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம், காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம், இழப்பீடுகளுக்கான அலுவலகம் மற்றும் சிவில் சமூகத்துடன் ஈடுபாடு உட்பட அளவிடக்கூடிய மற்றும் சரிபார்க்கக்கூடிய முன்னேற்றத்தை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் எடுத்துரைத்தார்.

விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் கீழ் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட மெக்ஸ்வெல் பரணகம ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட சர்வதேச சட்ட வல்லுநர்களின் கருத்துகள் அடங்கிய ஆவணத்தை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மனித உரிமைகள் பேரவையின் தலைவரிடம் கையளித்தார்.

அணிசேரா இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளருடனான சந்திப்பின்போது, அணிசேரா இயக்கத்துடனான இலங்கையின் நீண்டகால மற்றும் வலுவான உறவுகளை குறிப்பிட்ட அசர்பைஜானின் நிரந்தரப் பிரதிநிதி கலிப் இஸ்ரபிலோவ், தற்போது அணிசேரா இயக்கத்தின் பொருத்தத்தை வலியுறுத்தினார். சமகால சவால்களை எதிர்கொள்வதற்காக வேறு எந்த நேரத்தையும் விட இன்று ஒற்றுமை மற்றும் அணிசேரா ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார்.

பிரேஸிலின் நிரந்தரப் பிரதிநிதி டோவர் டா சில்வா நூன்ஸ் உடனான சந்திப்பின்போது, இலத்தீன் அமெரிக்காவில் உள்ள நாடுகளுடன் மிகவும் தீவிரமாக ஈடுபடுவதற்கான இலங்கையின் ஆர்வத்தை வலியுறுத்திய வெளிநாட்டு அமைச்சர் பீரிஸ், இலங்கையின் தற்போதைய பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சினைகள் குறித்து விரிவாக விளக்கினார்.

## மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டால் மீன் விலை அதிகரிப்பு

(மன்னார் நகர் நிருபர்)

நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டு பிரச்சினை காரணமாக தொடர்ந்து பொருட்களின் விலை அதிகரித்து வருகின்றது. இந்த நிலையில் மண்ணெண்ணெய் இன்மையால் மீன்பிடி தொழில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மீன்களின் விலைகளும் அதிகரித்துள்ளன.

மீன்பிடி நடவடிக்கைக்கு என மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படுவதால் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் மீனவர்களின் எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளது. அதேநேரம், எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாகவும் சந்தையில் மீன் விலை அதிகரித்துள்ளது. இதனால் மீனவர்கள் உட்பட மீன் சந்தையில் மீன் வியாபாரத்தில் ஈடுபடும் மீன் வியாபாரிகளும் பாதிப்படைந்துள்ளனர்.

மேலும், அண்மை நாட்களாக மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடாமையினால் மீன் சந்தையில் மீன்களின் வருகையும் குறைந்துள்ளது. இதன் காரணமாக மீன் விலையும் அதிகரித்துள்ளது. மீன் விலை அதிகரித்துள்ளமையினால் மீன்களை கொள்வனவு செய்யும் மக்களின் எண்ணிக்கையும் குறைந்துள்ளதாக மீன் வியாபாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

மீன்பிடி இன்மை மற்றும் மீன் வியாபாரம் தொடர்ச்சியாக குறைந்துள்ளமையினால் மீன் சந்தைகளை குத்தகை ரீதியாக பெற்று நடத்தும் குத்தகைதாரர்களும் வருமானம் இன்றி பாதிப்படைந்துள்ளனர். எனவே, விரைவில் மீனவர்களுக்கான மண்ணெண்ணெய் போதிய அளவில் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாட்டை மேற்கொண்டு தருமாறு மீனவர்கள் மற்றும் மீன் வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.




ஹட்டன் புகைப்பட சங்கத்தின் நிதி அனுசரணையில் ஹட்டன் சேகரனின் ஏற்பாட்டில் கொட்டகலை 'வீ' ஆசிரியர் ஒன்றியத்தினால் தலவாக்கலை லோகி பாடசாலை மாணவர்கள் 100பேருக்கு தலா 1000 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. அண்மையில் தலவாக்கலை லோகி பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நுவரெலியா கல்வி வலயத்தின் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஜெகதீஸ்வரன், பாடசாலை அதிபர் யோகலிங்கம், ஹட்டன் சேகரன் மற்றும் வீ ஆசிரியர் ஒன்றியத்தின் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர். (படங்கள்:-தலவாக்கலை நிருபர்)

# சுகதேகியாக வாழ யோகாசனம் முக்கிய காரணியாக அமைகிறது

## கண்டி உதவி இந்தியத் தூதுவர் ஆதிரா

**சர்வதேச யோகா தினம் 21ஆம் திகதி கண்டியில் கொண்டாடப்படும்**



(கண்டி நிருபர்)

சர்வதேச யோகா தினத்தை இம்முறை கண்டியில் கொண்டாடுவதற்கு, கண்டி உதவி இந்தியத் தூதுவராலயம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக கண்டி உதவி இந்தியத் தூதுவர் டாக்டர் எஸ். ஆதிரா தெரிவித்தார்.

கண்டி பல்லேகலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மத்திய மாகாண பிரதான செயலாளர் உட்பட உயர் அதிகாரிகளும் இதன்போது கலந்து கொண்டனர்.

மேலும், இயற்கை வழிமுறைகளைப் பின்பற்றி சுகதேகியாக வாழ்வதற்கு யோகாசனம் முக்கிய காரணியாக இருப்பதால் அதனை பிரபல்யப்படுத்தும் வகையில் உலகளாவிய ரீதியில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் அடிப்படையில் எதிர்வரும் 21ஆம் திகதி கண்டி அஸ்கிரிய மைதானத்தில் கொண்டாடப்படவுள்ளது.

காலை 8.30 மணிக்கு ஆரம்பிக்கப்படும் யோகா தின நிகழ்வில், பாடசாலை மாணவர்கள் 200 பேரும் அரச உத்தியோகத்தர்கள் 100 பேரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கடந்த 7 வருடங்களாக கண்டியில் யோகா தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. அதேபோல் தொடர்ந்து இம்முறை 8ஆவது தடவையாகவும் கொண்டாடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது என்றார்.

## தலவாக்கலை – கொத்மலை வீதியில் விபத்து

# தனியார் பஸ் - மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதியதில் ஒருவர் பலி: பஸ் சாரதி கைது

(தலவாக்கலை நிருபர்)

தலவாக்கலை - கொத்மலை வீதியில் தனியார் பஸ் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த குறித்த நபரே இவ்வாறு நேற்று புதன்கிழமை (15) உயிரிழந்துள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் லிந்துலை மெராயா தோட்டத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான நடராஜ் செல்லதுரை (வயது 46) என அடையாளங் காணப்பட்டுள்ளார். இவ்விபத்து தலவாக்கலை சுற்று வட்டத்திற்கு முன்பாக இடம்பெற்றுள்ளது. தலவாக்கலை பஸ் தரிப்பிடத்திலிருந்து பூண்டுலோயா நோக்கி சென்ற தனியார் பஸ்ஸும் பத்தனை பகுதியிலிருந்து வந்த மோட்டார் சைக்கிளுமே இவ்வாறு தலவாக்கலை சுற்று வட்டத்திற்கு முன்பாக நேருக்கு நேர் மோதுண்டு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக லிந்துலை பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாகவும், அவரை நுவரெலியா நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தென்னைமரம் முறிந்து விழுந்ததில் பாடசாலை மாணவர்கள் 10பேர் வைத்தியசாலையில்







வெலிமடை இந்துக் கல்லூரிக்கு அருகில் காணி ஒன்றில் இருந்த தென்னை மரம் ஒன்று முறிந்து விழுந்ததில் பாடசாலை மாணவர்கள் 10பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று(15) காலை இடம் பெற்றுள்ளது.

குறித்த பாடசாலைக்கு அருகில் அமைந்திருந்த காணியில் இருந்த மிகப் பழமையான தென்னை மரம் ஒன்றே இவ்வாறு முறிந்து, வகுப்பறையின் மீது விழுந்ததிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் வெலிமடை இந்துக்கல்லூரியில் தரம் 6இல் கல்வி கற்கும் மாணவர்களே காயமடைந்து வெலிமடை பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் வெலிமடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.






அரச மக்கள் மன்றங்களில் பெண்களின் பிரதிநிதித்துவ அதிகரிப்பு தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு ஒன்று பதுளை மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் பதுளை ஹெரிடேஜ் கிராண்ட் விடுதியில் நேற்று(15) நடைபெற்றது. இதன்போது ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக பேராசிரியர் ருவன் ரணசிங்க, மகளிர் அமைப்பின் தலைவி எம்.சந்திரா மற்றும் மகளிர் அபிவிருத்தி மேம்பாட்டாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (படங்கள்:-பதுளை நிருபர்)

# விவசாயத்தை பாதுகாக்க எரிபொருள் விநியோகத்தை சீர்செய்யுங்கள்

## வலி. கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் நிரோஷ்



(யாழ். நிருபர்)

அரசாங்கம் உடனடியாக விவசாயிகளுக்கு எரிபொருள் விநியோகத்தை சீர்செய்வதுடன் விவசாயத்தைப் பாதுகாப்பதற்கு சிறந்த தீர்மானங்களை எடுக்கவேண்டும் - என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

அச்சுவேலி பிரதேச கமக்காரர்கள், விவசாயத்திற்கான எரிபொருள் தேவையை வலியுறுத்தி நேற்று (15) புதன்கிழமை காலை அச்சுவேலி சந்தையில் கையெழுத்துப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

அப்போராட்டத்தில் கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு மிகவும் நெருக்கடியான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இன்றைய காலகட்ட கணிப்பின் பிரகாரம் எதிர்வரும் வாரங்களில் உணவுப்பொருட்கள் கிடைக்குமோ என்ற அச்சத்தில் மக்கள் வாழ்கின்றனர்.

அரசாங்கம் உணவுப் பாதுகாப்பினையும் அத்தியாவசிய உணவுப் பொருட்களையும் மக்களுக்கு நியாய விலையில் கிடைக்கச் செய்யவேண்டும் என்ற பொறுப்பினையும் நிறைவேற்றத் தவறியுள்ளது. அடிப்படையில் நாட்டின் உணவுப் பாதுகாப்பிற்கான கட்டமைப்பு சீர்குலைந்துள்ளது.

இத்துர்ப்பாக்கிய நிலைமைக்கு உரக்கொள்கை போன்ற விடயங்களில் அரசாங்கம் பின்பற்றிய தவறான நடவடிக்கைகள் பிரதான காரணமாகும். நாம் இயற்கை வழி உரப்பாவனையுடன் கூடிய விவசாய முயற்சிகளை வரவேற்கும் அதேவேளை, குறுங்காலத்தில் இயற்கை உரப்பாவனையை அடிப்படையாகக்கொண்ட விவசாயத்தை நாட்டில் வெற்றியடையச் செய்ய முடியுமா என படித்தவர்களிடமும் ஆய்வாளர்களிடமும் ஜனாதிபதி ஆலோசனை கேட்டிருக்க வேண்டும். விவசாயிகளுடன் கலந்துரையாடியிருக்க வேண்டும்.

இன்று எமது நிலங்களில் நாம் விவசாயத்தினை முன்னெடுப்பதற்கு உரிய தடைகளின்றி எரிபொருளை விநியோகிக்கக் கோருகின்றோம். காரணம், விவசாயிகள் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் அவர்களது தொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கான குறைந்தபட்ச எரிபொருள் விநியோகத்தையேனும் பெற முடியாது திண்டாடுகின்றனர் என்பதை வெளிப்படுத்துவதற்காகவே திரண்டுள்ளோம்.

விவசாயிகள் தொழில் முயற்சிகளை மேற்கொள்ள முடியாத சூழல், விவசாய உற்பத்தியாளர்களை மாத்திரம் பாதிக்கும் தொழில்சார் பிரச்சினை கிடையாது. மாறாக அத்தனை மக்களது வயிற்றுப்பசியைப் போக்குவது சார்ந்த பிரச்சினையாகும். அரசாங்கம் தாமதமின்றி இவ்விடயத்தில் பொறுப்புச் சொல்லவேண்டும் - என்றார்.

# அச்சுவேலி கமக்காரர்கள் எரிபொருள் தேவையை வலியுறுத்தி கையெழுத்துப் போராட்டம்





(யாழ். நிருபர்)

அச்சுவேலி பிரதேச கமக்காரர்கள் விவசாயத்திற்கான எரிபொருள் தேவையினை வலியுறுத்தி கையெழுத்துப் போராட்டத்தினை ஆரம்பித்துள்ளனர்.

அச்சுவேலி சந்தையில் நேற்று புதன்கிழமை காலை இந்த கையெழுத்துப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த கையெழுத்துகள் சேகரிக்கப்பட்டு மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர் மற்றும் விவசாயத் திணைக்கள அதிகாரிகளிடம் கையளிக்கப்படவுள்ளது.

# ஆலயத்திலிருந்து வீடு திரும்பிய மூதாட்டி வழியில் விழுந்து மரணம்


(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி, சரசாலை தெற்கு பகுதியைச் சேர்ந்த 70 வயதான மூதாட்டி ஒருவர் கடந்த திங்கட்கிழமை ஆலயத்திலிருந்து வீடு திரும்பிய வேளையில் வீதியில் விழுந்து உயிரிழந்துள்ளார்.

வீட்டுக்கு அருகாமையிலுள்ள ஆலயத்திற்கு சென்று வணங்கிய பின்னர் நடந்து வீடு திரும்பிய வேளையில், உள் வீதி ஒன்றில் விழுந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த பெண்மணியின் சடலம் மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# கோண்டாவிலில் திருடப்பட்ட கட்டடப் பொருட்கள் மீட்பு



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோண்டாவில் பகுதியில் அண்மையில் திருடப்பட்ட 20 இலட்சம் ரூபா பெறுமதியான கட்டடப் பொருட்கள் கோப்பாய் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

கடந்தவாரம் கோண்டாவில் பகுதியில் ஒப்பந்தக்காரர் ஒருவரினால், தாம் வேலை செய்துகொண்டிருந்த வீட்டில் வைக்கப்பட்டிருந்த பெறுமதியான நில மாபிள்கள், கழிவறைக்கு பயன்படுத்தும் மாபிள் உபகரணங்கள், மின் மோட்டார் மற்றும் மின் வயர்கள், இலத்திரனியல் உபகரணங்கள் உள்ளடங்கலாக சுமார் இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டமை தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் திருடப்பட்ட பொருட்களை மீட்டுள்ளனர். அத்துடன் சந்தேகநபர் ஒருவரையும் கைதுசெய்துள்ளனர்.

# கொடிகாமத்தில் கார் மோதி ஒருவர் உயிரிழப்பு



(சாவகச்சேரி நிருபர்)

கொடிகாமம் நகரை அண்மித்த கொயிலாமனை சந்திப் பகுதியில் ஏ9 வீதியில் நேற்று முன்தினம் (14) 3 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் நபர் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.

ஏ9 வீதியால் சைக்கிளில் பயணித்தவர் கிளை ஒழுங்கை ஒன்றின் ஊடாக பயணிக்க முற்பட்ட வேளையில் அதேதிசையில் வந்த கார் பின்புறமாக மோதியதில் சைக்கிளில் பயணித்தவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரது சடலம் இதுவரை அடையாளம் காணப்படாத நிலையில் சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்துதொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# பொருளாதார நெருக்கடியிலும் வல்லாதிக்க பௌத்த மேலாண்மை கைவிடப்படவில்லை

## குருந்தூர்மலை விவகாரம் தொடர்பில் இலங்கை சைவ மகா சபை கவலை



(நெல்லியடி நிருபர்)

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி நிலைமையிலும் வல்லாதிக்க பௌத்த மேலாண்மையை கைவிடாத மோசமான மனநிலை, நாட்டிலிருந்து ஒழிக்க முற்போக்கு சக்திகள் முன்வர வேண்டும் என அகில இலங்கை சைவ மகா சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பில் அகில இலங்கை சைவ மகா சபை வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கிழக்கு திருகோணமலை மண்ணில் அரங்கேற்றப்பட்ட விடயங்கள் இன்று வன்னி, முல்லைத்தீவு, மண்ணில் தொடர்கிறது.

குருந்தூர் மலை ஆதி சிவபூமி திருமலையும், முல்லையும் சந்திக்கின்ற மணலாறு இதயபூமிக்கு அண்மித்ததாக உள்ளதே குருந்தூர்மலை.

பண்டார வன்னியன் ஆண்ட வன்னி அரசினதும் கூழங்கை சக்கரவர்த்தி எனும் மாகனது ஆட்சிக் காலத்திலும் முன்னைய குளக்கோட்டன் உட்பட்ட பண்டை தமிழ் மன்னர் ஆட்சி காலத்திலும் இந்த பெருநிலப்பரப்பு மிகவும் உன்னதமான சைவத் தமிழ் பண்பாட்டு செழுமையுடன் காணப்பட்டதற்கு இலக்கிய, தொல்லியல் வரலாற்று ஆதாரங்கள் பல உள்ளன.

இவற்றை எல்லாம் மறுதலித்து தொன்று தொட்டு இன்று வரை தமிழர்கள் மட்டும் வாழ்ந்து வரும் சிவபெருமானின் குறியீட்டு வடிவாகிய சூலத்துடன் ஆதி சிவ அய்யனாக பூர்வக்குடிகள் ஆயிரம் வருடங்களாக வழிபாடு செய்து வரும் சிவ பூமியின் வரலாற்றை திரிபுபடுத்த முனைவது மிகவும் மோசமான அறமற்ற செயற்பாடாகும்.

சிவ வழிபாட்டு பூமி என்பதை இங்கு அண்மைய ஆண்டுகளில் நிகழ்த்தப்பட்ட அகழ்வாராய்ச்சிகளில் கண்டெடுக்கப்பட்ட பண்டைய தமிழ் மன்னர் கால எட்டுப்பட்டை தரா லிங்கமும் சான்று பகிர்கின்றது. இருப்பினும் இந்த இலிங்கம் கண்டெடுக்கப்பட்டபோது எழுந்த உணர்வலைகள் சிறிது சிறிதாக மழுங்கடிக்கப்பட்டன.

தற்போது சைவத்தமிழர், சிங்கள பௌத்தர், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் என முழுத்தீவின் இன மதக் குழுமங்களும் பொருளாதார நெருக்கடியால் அன்றாட வாழ்வில் அவலங்களை சந்தித்து வரும் நிலையில், வேக வேகமாக நீதிமன்ற உத்தரவையும் மீறி பழைய பாணியில் புதிதாக தூபியை நிறுவி புத்தரை நிலைநிறுத்த முயலும் செயற்பாடுகள் பகிரங்கமாக முன்னெடுக்கப்படுவது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

பொதுவாக, புத்தர் போதித்த உண்மையான தர்மத்தை பின்பற்றுவோர் இவ்வாறான செயல்களை செய்யமாட்டார்கள். அதுவும் கர்மா கணக்கின் காரணமாகவே நாட்டில் இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளது என்பதையும் பழைய மோசமான தவறுகளிற்கு பகிரங்கமாக பல இளையோர் கலைஞர்கள் தங்கள் ஆதங்கங்களை பொது வெளியில் பகிரங்கப்படுத்தியுள்ள இத்தருணத்தில், புரையோடிப்போய் இருக்கும் ஆறாத வடுக்களை மீளக் கிளற உண்மையான சிங்கள பௌத்தர்கள் அனுமதிக்கக் கூடாது என்பதே இந்த தருணத்தில் மனிதாபிமான சிந்தனைகளும் ஏழைகளின் பசிப்பிணி, உடற்பிணி தீர்க்கும் பணிகளிலுமே முன்னுரிமை பெற வேண்டும் என விரும்பும் மனிதத்தை நேசிக்கும் சைவத்தமிழர்களின் பெருவிருப்பாகும் என்பதை சுட்டிக்காட்டி நிற்கின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# 250 பல்கலை மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கி வைப்பு



(அஷ்ரப் ஏ சமத்)





சிலோன் பைத்துமால் நிதியத்தினால் நாட்டில் உள்ள 17 பல்கலைக்கழகங்களிலிருந்து முகாமைத்துவம், வணிகம் கலைத்துறைகளில் தற்பொழுது முதலாம் ஆண்டு பயிலும் 250 மாணவ மாணவிகளுக்கு புலமைப்பரிசில் வழங்கும் திட்டம் இம்முறையும் 8ஆவது தடவையாக கடந்த ஞாயிற்றுக்கிழமை (12) பம்பலப்பிட்டியிலுள்ள பைத்துல்மால் நிதியத்தின் தலைமை அலுவலகத்தில் வைத்து வழங்கிவைக்கப்பட்டது.

இந்நிகழ்வு பைத்துல்மால் நிதியத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி ஏ.ஏ.எம். இல்யாஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பியுஜி நாட்டின் வருகை தரும் நீதிபதியும் இலங்கை அரச சட்டத் திணைக்களத்தின் சிரேஷ்ட மேலதிக சொலிசிஸ்டர் ஜெனரல் பர்சான ஜெமீல் (ஜனாதிபதி சட்டத்தரணி) பிரதம அதிதியாகவும் ஹேமாஸ் வைத்தியசாலையின் தலைவர் சட்டத்தரணி முர்தாஸ் யூசுப்அலி, முன்னாள் பிரதியமைச்சர் ஹூசைன் பைலாவும் கலந்து கொண்டனர்.

இங்கு உரையாற்றிய பைத்துல்மால் நிதியத்தின் தலைவர்,

இலங்கையில் நிலவிவருகின்ற பொருளாதார சூழ்நிலை காரணமாக 2020ஆம் ஆண்டு பல்கலைக்கழகம் பயிலும் முகாமைத்துவம், கலை மாணவர்களிடமிருந்து 750 விண்ணப்பங்கள் 17 பல்கலைக்கழகங்களிலிருந்து முஸ்லிம் மாணவர்கள் விண்ணப்பித்திருந்தனர். அதில் 150 ஆண் மாணவர்கள் ஏனையவர்கள் 600 பெண் மாணவிகளாவர். இவர்களில் 500 மாணவர்களை தெரிவு செய்தோம். அதாவது, முஸ்லிம் பெண்கள் பல்கலைக்கழகம் புகும் வீதம் 70 வீதமாக அதிகரித்துள்ளது.

வடக்கு, கிழக்கில் இப்புலமைப்பரிசில் திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் இவ் நிகழ்வுக்கு வருகை தரவில்லை. அவர்கள் ஊர்களிலிருந்து கொழும்புக்கு பிரயாணத்திற்காக பெரும் தொகைப்பணத்தினை செலவழிக்க வேண்டியுள்ளது. அதற்காகவே மேல் மாகாணம் புத்தளம், கண்டி பிரதேசத்திலிருந்து 200 மாணவர்களை மட்டும் அழைத்து அவர்களுக்கு மாதாந்தம் ரூபா 2500 வீதப்படி 6 மாத காலத்திற்காக 15 ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றது. இதனை உங்களது கல்வி மேம்பாட்டுக்காக செலவிட முடியும். இந்த நாட்டில் உள்ள முஸ்லிம் வர்த்தகர்கள், தனவந்தர்களிடமிருந்து நன்கொடையாக கிடைக்கப்பெற்ற இந் நிதியையே கடந்த 8ஆவது வருடங்களாக புலமைப்பரிசில் திட்டத்தினை வசதிகுறைந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கி வைக்கின்றோம் என தெரிவித்தார்.

இவ் வைபவத்திற்கு பிரதம அதிதியாக வருகை தந்தவரின் உறவினரும் காலஞ்சென்ற நீதியரசர் ஜெமில் இந்த அமைப்பிலிருந்து பங்காற்றினர். இந்நிதியம் 1957ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொள்ளும் அரச சட்டத் திணைக்களத்தில் 3ஆவது நிலையில் உள்ள பர்சானா ஜெமீல் முதலாவது முஸ்லிம் பெண் ஜனாதிபதி சட்டத்தரணியாவார். அவர் இலங்கை சட்டத் திணைக்களத்தில் 3ஆவது நிலையில் சிரேஷ்ட மேலதிக சொலிசிஸ்டர் ஜெனரலாக பதவி வகிக்கின்றார். அவர் சட்டக் கல்வியை லண்டன் பல்கலைக்கழகத்தில் பயின்றவர். அவர் கூறும் அறிவுரைகளை இளம் மாணவ மாணவிகள் ஏற்று அவர் போன்று நீங்களும் கல்வியில் முன்னேற முயற்சிக்கவேண்டும் எனவும் தலைவர் இல்யாஸ் இதன்போது தெரிவித்தார். இந்நிகழ்வில் செயலாளர் நஸ்வி ரகுமான், பொருளாளர் பெரோஸ் நூன் மற்றும் முகாமைத்துவ அங்கத்தவர்கள் நன்கொடையாளர்களும் கலந்து கொண்டு மாணவர்களுக்கு நிதி வழங்கி வைத்தனர்.

# ஒலுவில் மீன்பிடித் துறைமுக செயற்பாடுகளை மீள ஆரம்பிக்க அமைச்சரவை அனுமதி

## விரைவில் கிழக்கு மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேற்றப்படுமென அமைச்சர் டக்ளஸ் சுட்டிக்காட்டு



ஒலுவில் மீன்பிடித் துறைமுகத்தின் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாக தெரிவித்துள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இதன்மூலம் கிழக்கு மாகாண கடற்றொழில்சார் மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேறவுள்ளதாகவும் தெரிவித்தார்.

அதனடிப்படையில், குறித்த மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து ஆழ்கடல் பலநாள் மீன்பிடிக் கலன்கள் மற்றும் ஒருநாள் படகுகள் ஆகியவற்றின் மூலமான மீன்பிடி நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், குறித்த துறைமுகத்தில் அமைக்கப்பட்டுள்ள, கடலுணவுகளை பதப்படுத்தி களஞ்சியப்படுத்தும் தொகுதியின் திருத்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், நூற்றுக்கணக்கானோருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கக் கூடிய கடலுணவுகளை பதப்படுத்தி களஞ்சியப்படுத்தும் செயற்பாடுகளை முதற்கட்டமாக ஆரம்பிப்பதற்கான வேலைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன" எனவும் கடற்றொழில் அமைச்சர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருளுடன் ஒருவர் கைது



வத்தளையில் ஒரு கிலோ 20 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். குறித்த சந்தேகநபர், நேற்று முன்தினம் (14) பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமையவே கைதுசெய்யப்பட் டுள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது, சம்பந்தப்பட்ட சந்தேகநபர் குறித்த போதைப் பொருளை காரில் வைத்து எடுத்துச் சென்று கொண்டிருந்தபோது வத்தளை நகரில் வைத்து முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மன்னார் பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் கைப்பற்றப்பட்ட அவரின் காருடன் பொலிஸ் பிரிவினரிடம் ஒப்படைக்க பொலிஸ் அதிரடிப்படை அதிகாரிகளினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் போதைபொருள் ஒழிப்புப் பிரிவினரால் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# கட்டுகஸ்தோட்டை சாஹிரா கல்லூரியில் கணினி தொழில்நுட்ப நிலையம் திறந்து வைப்பு





(இக்பால் அலி)

பாகிஸ்தான் நாட்டு உயர்ஸ்தானிகராலயத்தினால் கண்டி கட்டுகஸ்தோட்டை சாஹிராக் கல்லூரியில் கணினி தொழில்நுட்ப நிலையம் திறந்துவைத்தல் மற்றும் வறிய குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

அதிபர் ஏ.எச். கலிலுர் ரஹ்மான் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பாகிஸ்தான் நாட்டு உயர்ஸ்தானிகர் ஓய்வு பெற்ற மேஜர் உமர் பாரூக் புர்க்கி கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இதில் பாகிஸ்தான் நாட்டு இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி அப்சல் மரைக்கார் பாடசாலை அபிவிருத்தி சங்கக் குழுவினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கட்டுகஸ்தோட்டைப் பிரதேசத்தில் உள்ள வறிய குடும்பங்களைச் சேர்ந்த மக்களுக்கான உலருணவுப் பொதிகளும் மற்றும் பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# விமானப்படை தளபதி – பிரதமர் சந்திப்பு



விமானப்படைத் தளபதி எயார் மார்சல் சுதர்ஷன பத்திரண பிரதமர் அலுவலகத்தில் வைத்து அண்மையில் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடியிருந்தார். இந்த கலந்துரையாடலின் பின்னர் இருவருக்கும் இடையில் நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்போது நாட்டில் தற்போதைய நிலைவரங்கள் உள்ளிட்ட எதிர்கால பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

# பேருவளை அப்ரார் கல்வி நிலையத்தின் ஏற்பாட்டில் புலமைப்பரிசில் வழங்கும் வைபவம் எதிர்வரும் 27இல்

(பீ.எம். முக்தார்)

பேருவளை அப்ரார் கல்வி நிலையத்தின் ஏற்பாட்டிலான 9ஆவது புலமைப்பரிசில் வழங்கும் வைபவம் எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மருதானை அல்- பாஸியதுல் நஸ்ரிய்யா முஸ்லிம் மகளிர் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அப்ரார் கல்வி நிலைய ஸ்தாபகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அல்ஹாஜ் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் தலைமையில் நடைபெறும். இவ்விழாவில் பாகிஸ்தான் நாட்டின் இலங்கை உயர்ஸ்தானிகர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் உமர் பாரூக் பிரதம அதிதியாகவும் அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபையின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரும் சீனன் கோட்டை பள்ளிச்சங்கம் மற்றும் ஜாமியதுல் பாஸுயதுஷ் ஷாதுலிய்யா கலாபீடம் ஆகியவற்றின் நிர்வாகக் குழு உறுப்பினருமான அஷ் ஷெய்க் இஹ்ஸானுத்தீன் அபுல் ஹஸன் (நளீமி) விசேட பேச்சாளராகவும் கலந்துகொள்ளவுள்ளார்.

பேருவளை பகுதியில் உள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் குறைந்த வருமானம் பெறும் சுமார் 50 மாணவர்களுக்கு இந்நிகழ்வில் தமது கல்வியைத் தொடர புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளதாக அப்ரார் கல்வி நிலைய செயலாளர் அல்ஹாஜ் இக்பால் ஸம்ஸுதீன் தெரிவித்தார்.

அப்ரார் கல்வி நிலைய தலைவரும் ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளருமான அல்ஹாஜ் எ.டபிள்யூ.எம் அஜ்வாத் ஜே.பி, பொருளாளரும் ஓய்வுபெற்ற அதிபருமான அல் ஹாஜ் எம்.எல்.ஏ.எம். அப்துல் அஹ்லா உட்பட கல்வி நிலைய உறுப்பினர்கள், உலமாக்கள், பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், ஊர்பிரமுகர்கள் எனப் பலரும் விழாவில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கடந்த பல வருடங்களாக மேற்படி கல்வி நிலையம் பிரதேசத்தில் உள்ள குறைந்த வருமானம் பெறும் பாடசாலை மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. புலமைப்பரிசில் பெற்ற பெருமளவிலான மாணவர்கள் உயர்க்கல்வி மற்றும் பல்கலைக்கழக கல்வியை பூர்த்தி செய்து நாட்டிலும் வெளிநாடுகளிலும் தொழில் செய்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இந்த கல்வி நிலையம் மேற்கொள்ளும் புலமைப்பரிசில் வழங்கும் வேலைத்திட்டத்திற்கு பிரதேசத்தில் உள்ள பரோபகாரிகள் தொடர்ந்தும் பங்களிப்புச் செய்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ்த் தாத்தா முருகேசனாரின் 57ஆவது நினைவு தின நிகழ்வு







புலோலியூர் தமிழ் அறிஞர்களில் ஒருவரான தமிழ்த் தாத்தா கந்த முருகேசனாரின் 57ஆவது நினைவு தினம் நேற்று முன்தினம் (14) அனுஷ்டிக்கப்பட்டது.

இதனை முன்னிட்டு, நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் மந்திகைச் சந்தியிலுள்ள அன்னாரின் உருவச்சிலைக்கு சிலையை நிறுவிய புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் அஞ்சலி நிகழ்வு நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் சங்கத்தலைவர் வி.ஜி. தங்கவேல் கந்தமுருகேசனார் நற்பணி நிதியத் தலைவர் எஸ். கனகலிங்கம் ஆகியோர், கந்தமுருகேசனாரின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்தும் மலரஞ்சலியும் செய்தார்கள்.

நிகழ்வில் நற்பணி நிதிய அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர்.

திகதி 14.06.2022 செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4786
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,740,740.00
ஆங்கில எழுத்து B வெற்றி இலக்கங்கள் 5 4 5 2 9 8
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 20,631,523.40

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1264
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 829,100.00
வெற்றி இலக்கினம் விருச்சிகம் வெற்றி இலக்கங்கள் 9 2 9 7 6 2
அடுத்த சீட்டிழுப்பின சுப்பர் பரிசு ரூ. 11,834,102.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3028
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,726,500.00
ஆங்கில எழுத்து R வெற்றி இலக்கங்கள் 16 20 28 66
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 60,277,371.60

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 816
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 852,860.00
வெற்றி இலக்கினம் F வெற்றி இலக்கங்கள் 03 07 41 42
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 114,498,356.00

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0095
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,554,120.00
இலக்கினம் துலாம் வெற்றி இலக்கங்கள் 07 36 40 55
விசேட இலக்கினம் துலாம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,507,547.00

கோடி 25+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1134
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,419,200.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 256,425,774.00
A 03 36 45 57 59
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01

# சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட 64 பேர் திருகோணமலை கடற்படையினரால் கைது

(ரவ்பீக் பாயிஸ், அப்துல்சலாம் யாசீம்)

நாட்டில் சீர்குலைந்த பொருளாதாரத்திற்கு முகங்கொடுக்க முடியாமல் நாட்டைவிட்டு பெரும்பாலான மக்கள் சட்டவிரோதமான முறையில் வெளிநாடுகளுக்கு செல்வது தொடர்ந்தும் அதிகரித்து வருகின்ற நிலையில், நேற்று (15) சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட 64 பேர் திருகோணமலை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட 64 சந்தேக நபர்களும் திருகோணமலை, மூதூர் இலங்கை துறைமுகத்துவாரம் பிரதேசத்திலிருந்து சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியா செல்ல முற்பட்டபோது கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.







11 பெண்கள், 3 சிறுவர்கள் அடங்கலாக மொத்தம் 64 பேர் கைதுசெய்யப்பட்டதாகவும் பின்னர் திருகோணமலை துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகளை திருகோணமலை துறைமுக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# சீரற்ற காலநிலையால் உப்பூரல் பகுதியில் 38 வீடுகள் சேதம்

## பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளை வழங்க அனர்த்த முகாமைத்துவ நிலையம் நடவடிக்கை



(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை, வெருகல் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட உப்பூரல் பகுதியில் நேற்று முன்தினம் (14) மாலை வீசிய காற்றினால் 38 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

உப்பூரல் பிரதேசத்தில் பலத்த மழையுடன் கூடிய மழைபெய்துவந்த நிலையில், காற்று மிகவும் வேகமாக வீசியது. இதனால் 38 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன், மீனவர்களின் வள்ளங்கள் சில உடைந்துள்ளதாகவும் மீனவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, மரம் ஒன்று முறிந்து விழுந்ததில் மோட்டார்சைக்கிள் ஒன்றும் சேதமடைந்துள்ளது.

பலத்த காற்றுடன் கூடிய மழையினால் ஏற்பட்ட சேத விபரங்களை வெருகல் பிரதேச செயலகம் ஊடாக திரட்டி வருவதாகவும் இதுவரைக்கும் 38 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் திருகோணமலை மாவட்ட உதவிப் பணிப்பாளர் குகதாஸ் சுகுணதாஸ் தெரிவித்தார்.

அத்துடன், பாதிப்புக்குள்ளானவர்கள் குறித்து தகவல்களை பெற்று மாவட்ட அரசாங்க அதிபரின் ஆலோசனையின்பேரில் வெருகல் பிரதேச செயலாளரின் உதவியுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மின்சாரம் தாக்கி நான்கு பிள்ளைகளின் தாய் பலி

## காவத்தமுனையில் சோகம்



(கல்குடா, மீராவோடை நிருபர்கள்)

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள காவத்தமுனையில் மின்சாரம் தாக்கியதில் குடும்பப் பெண்ணொருவர் நேற்று (15) காலை உயிரிழந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

காவத்தமுனை மையவாடி வீதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தாயான அகமது உசனார் லத்தீபா (வயது 51) என்ற குடும்பப் பெண்ணே உயிரிழந்துள்ளார். நேற்று அதிகாலை 6 மணியளவில் வீட்டு வேலைகளை செய்வதற்காக வெளியில் வந்து வீட்டிற்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ள கூடாரத்தின் கம்பியில் கை வைத்த சமயத்தில் மின்சார ஒழுக்கு காரணமாக மின்சாரம் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

மின்சார வயர் முன் கூடாரத்திலுள்ள தகரத்தில் பட்டு சிதைவடைந்திருந்த நிலையில், மின்சாரம் தாக்கியுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

மின்சாரம் தாக்கிய பெண்ணை குடும்ப உறவினர்கள் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டுசென்ற நிலையில், செல்லும் வழியில் உயிரிழந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# திருகோணமலை தள வைத்தியசாலை கட்டடத்தின் கூரை மேலேறி அம்பியூலன்ஸ் சாரதி போராட்டம்





(திருகோணமலை நிருபர்)

திருகோணமலை தள வைத்தியசாலை கட்டடத்தின் கூரைக்கு மேல் ஏறி தனிநபர் ஒருவர் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டுள்ளார்.

சட்டத்துக்கு முரணான முறையில் தன்னை வேறொரு வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்துள்ளதாகவும் திருகோணமலை தள வைத்தியசாலை பணிப்பாளருக்கு எதிராக தனது இடமாற்றத்தை இரத்து செய்யுமாறு கோரியும் குறித்த நபர் நேற்று (15) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

கெமுனு துமிந்த திலக்க (வயது - 42) என்ற அம்பியூலன்ஸ் சாரதி திருகோணமலை வைத்தியசாலையில் எட்டு வருடத்துக்கும் அதிகமாக கடமையாற்றிய நிலையில், தன் மீது பொய் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு குறித்த இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் அதற்கான தண்டனையை தான் அனுபவிக்க தயாராக இருப்பதாகவும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை முற்றாக நிராகரித்து தனக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பில் சரியான நீதி கிடைக்கவேண்டும் எனவும் தனது முறையற்ற இடமாற்றத்தை இரத்து செய்யுமாறும் இதன்போது கோரிக்கை விடுத்தார்.

குறித்த சம்பவம் தொடர்பில் திருகோணமலை தள வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஐ.டபிள்யூ.எம்.ஜே.விக்ரமரத்னவிடம் வினவியபோது,

குறித்த சாரதி தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பாக சுகாதார அமைச்சின் செயலாளருடன் பலமுறை முறையிட்டதாகவும் அதற்கு சுகாதார அமைச்சின் செயலாளர் என்றவகையில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக குறித்த சாரதியின் இடமாற்றம் இடம்பெற்றதாகவும் அவர் தெரிவித்தார்.

குறித்த சாரதியை கந்தளாய் பொது வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளதாகவும் இடமாற்றத்திற்கு பின்னர் குறித்த சாரதி தனது வாகனம் மற்றும் விடுதியினை உரிய முறையில் மீண்டும் இதுவரை கையளிக்கவில்லை எனவும் பணிப்பாளர் குற்றம் சுமத்தினார்.

மேலும் சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட இடமாற்றத்தை மறுத்து, குறித்த சாரதி திருகோணமலை வைத்தியசாலை கட்டடத்தின் கூரைக்கு மேல் ஏறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் தமக்கு அறியக் கிடைத்ததையடுத்து அதனையும் சுகாதார அமைச்சின் செயலாளர் நாயகத்திற்கு அறிவித்ததாகவும் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் இடமாற்றம் செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் உரிய முறையில் தாம் பயன்படுத்திய வாகனம் மற்றும் விடுதியினை உரிய முறையில் உரிய அலுவலகத்திற்கு மீள கையளிப்பது அவரது கடமை எனவும் அவரது இடமாற்றம் தொடர்பில் ஏதும் முறைப்பாடு இருந்தால் எழுத்துமூலம் பாதிக்கப்பட்டவர் மேல்முறையீடு செய்ய அவருக்கு அதிகாரம் உண்டு எனவும் இதன்போது தெரிவித்தார்.

இவ்வாறிருக்கையில், குறித்த சாரதி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பானவை எனவும் தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை மறுப்பதாகவும் தன்மீது போதைவஸ்து பயன்பாடு இருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள நிலையில் அதனைத்தான் மறுப்பதாகவும் அவ்வாறு சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு வைத்திய அறிக்கை மூலம் நிரூபிக்கப்பட்டால் தமக்கு எவ்வாறான தண்டனை வழங்கப்பட்டாலும் தாம் ஏகமனதாக ஏற்றுக்கொள்வதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சாரதி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கந்தளாயில் சுற்றுலாப் பயணி மீது பட்டா லொறி மோதி விபத்து

## சாரதி கைது

(கந்தளாய் நிருபர்)

கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சுற்றுலா பிரயாணம் மேற்கொண்ட ஒருவர் சிறிய ரக பட்டா லொறியொன்று மோதியதில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பொலன்னறுவை பகுதியைச் சேர்ந்த ஐ.கான்ஸ்க் சேனாரத்ன, 19 வயதுடைய ஒருவரே அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றார். இவ்விபத்துச் சம்பவம் நேற்று (15) இடம் பெற்றுள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,


பொலன்னறுவையிலிருந்து திருகோண மலைக்கு சுற்றுலா சென்ற பஸ், கந்தளாய் குளத்தினை அண்டிய பகுதியில் நிறுத்தி பார்வையிட்டபோது அதில் ஒருவர் பிரதான வீதியை கடக்க முற்பட்டபோதே வீதியில் வேகமாக சென்ற சிறிய ரக பட்டா வாகனம் மோதியதில் குறித்த விபத்து நிகழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பட்டா வாகனத்தின் சாரதியை பொலிஸார் கைதுசெய்துள்ளதோடு, விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஓட்டமாவடி பாலத்தடியில் சிரமதானப் பணி







(மட்டக்களப்பு நிருபர்)

நீண்டகாலமாக கவனிப்பாரற்ற நிலையில் காடு மண்டிக் காணப்பட்ட ஓட்டமாவடி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஓட்டமாவடி - கொழும்பு பிரதான வீதியில் ஓட்டாமாவடி பாலத்தை அண்மித்த பிரதேசத்தை சுத்தம் செய்யுமாறும் அப்பிரதேசத்தில் நீண்டகாலமாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் கைவிடப்பட்ட நிலையில் காணப்படும் கொள்கலன் பெட்டியை அகற்றுமாறும் பொதுமக்களாலும் இப்பிரதேசத்தால் பயணிப்போராலும் கோரிக்கை விடுக்கப்பட்டுவந்த நிலையில், எவ்வித ஆக்கவூர்மான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

இதனைக் கவனத்திற்கொண்ட ஏவீ கல்குடா டைவர்ஸ் அமைப்பினர் உடனடியாகச் செயற்பட்டு குறித்த இடத்தை சிரமதானப் பணி மூலம் துப்புரவு செய்தனர்.

பற்றைக்காடாகக் காணப்பட்ட குறித்த பிரதேசத்தில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட கொள்கலன் பெட்டி இரவுவேளைகளில் அனாசாரங்கள் இடம்பெறுமிடமாகவும் போதைப்பாவனையாளர்களின் கூடாரமாகவும் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இச்சிரமாதனப்பணியில் அகீல் அனர்த்த சேவை வாகனப் பிரிவின் தலைவரும் ஓட்டமாவடி வர்த்தக சங்கத் தலைவருமான ஏ.சீ.எம்.நியாஸ்தீன் ஹாஜியார், ஏவீ கல்குடா டைவர்ஸ் அமைப்பின் செயலாளர் முஹம்மது ஹலீம், ஏவீ கல்குடா டைவர்ஸ் அனர்த்த சேவைப் பிரிவின் செயலாளர் முஹம்மது சதாம், ஏவீ கல்குடா டைவர்ஸ் அனர்த்த சேவைப் பிரிவின் முக்கியஸ்தர் பௌஸுல் மற்றும் ஏவீ கல்குடா டைவர்ஸ் அமைப்பின் நிர்வாகிகள், உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

அத்தோடு, இதன்பின்னரான மேலதிக அழகுபடுத்தல் செயற்பாடுகளை கல்குடா அல்-கிம்மா சமூக சேவைகள் அமைப்பின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம்.ஹாறூன் ஸஹ்வி, கல்குடா மீடியா போரத்தின் தலைவர் ஊடகவியலாளர் எம்.ரீ.எம்.பாரிஸ் ஆகியோர் முன்னெடுக்கவுள்ளதுடன், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையும் மீண்டும் இரண்டாம் கட்ட துப்புரவு பணி இடம்பெறவுள்ளதாக ஏவீ கல்குடா டைவர்ஸ் அமைப்பின் முக்கியஸ்தர் எம்மிடம் தெரிவித்தார்.

இன்றைய தினம் சிரமதானப் பணியில் ஈடுபட்ட சகோதர்களுக்கான காலை உணவு ஏற்பாடுகளை கல்குடா அல்-கிம்மா சமூக சேவைகள் அமைப்பின் பணிப்பாளரும் ஏவீ கல்குடா டைவர்ஸ் அமைப்பின் ஆலோசகருமான அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம்.ஹாறூன் ஸஹ்வி, பகலுணவை ஏவீ கல்குடா டைவர்ஸ் அமைப்பின் முக்கியஸ்தர் எம்.அமீர் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலை சிறையிலிருந்து பொசன் பௌர்ணமி தினத்தில் ஏழு கைதிகள் விடுதலை

(கந்தளாய் நிருபர்)

பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு 173 கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் அமைச்சு அறிவித்துள்ளது.

அந்தவகையில் திருகோணமலை சிறைச்சாலையிலிருந்து ஏழு கைதிகள் விடுதலை பெறுவதற்கு தெரிவுசெய்யப்பட்ட நிலையில், மூன்று கைதிகளுக்கு வேறு வழக்குகள் உள்ளதால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நான்கு கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இதில் இரண்டு பெண்களும் அடங்குவர். சிறு குற்றங்கள் புரிந்த, தண்டப்பணம் செலுத்த முடியாத கைதிகளே இவ்வாறு பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

# புளியந்தீவு புனித அந்தோனியார் ஆலய 222ஆவது வருடாந்த பெருவிழா நிறைவு





(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் புளியந்தீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் 222ஆவது வருடாந்த திருவிழா கடந்த (04) திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு திருத்தல நிர்வாகக் குரு அருட்பணி ஜே.எஸ்.மொறாயஸ் அடிகளார் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, கடந்த திங்கட்கிழமை (13) கொடியிறக்கத்துடன் நிறைவுபெற்றுள்ளது.

கடந்த சனிக்கிழமை (04) ஆரம்பிக்கப்பட்ட திருவிழாவில், நவநாட்காலங்களில் தினமும் 4.30 மணிக்கு திருச்செபமாலையும், அதனைத் தொடர்ந்து புனித அந்தோனியார் நவநாட் செபத்தின் பின் திருப்பலியும் இடம்பெற்று, 12.06.2022ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தூய ஆவியார் பெருவிழா காலை 11.30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு, பி.ப. 4.30 மணிக்கு மாலை ஆராதனை இடம்பெற்று, நற்கருணை ஆசீருடன் நிறைவடைந்திருந்தது. அதன்பின்னர் புனிதரின் திருச்சொரூப பவனி ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி வழமையான வீதிகள் வழியாக வலம் வந்து மீண்டும் ஆலயத்தை வந்தடைந்தது.

நவநாட் காலங்களில் அருட்தந்தையர்களான அருட்பணி சீ.வீ.அன்னதாஸ், ஜே.ஜீ.ஜீவராஜ், பிறைனர் செலர், ஆர்.திருச்செல்வம், ஜே.அனிஸ்ரன் மொறாயஸ், ஜீ.அலெக்ஸ் றோபட், எல்.லோறன்ஸ், எம்.ஸ்ரனிஸ்லாஸ் மற்றும் ஏ.தேவதாசன் உள்ளிட்ட அடிகளாரினால் சிறப்பு அருளுரைகளுடன் கூடிய திருப்பலிகளை ஒப்புக்கொடுத்திருந்தனர்.

பெருவிழா தினமான கடந்த திங்கட்கிழமை காலை 7.00 மணிக்கு பெருவிழா கூட்டுத் திருப்பலியாது மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி யோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில் மறைமாவட்ட குரு முதல்வர் எலெக்ஸ் றொபட், திருத்தல நிர்வாகக் குரு அருட்பணி ஜே.எஸ்.மொறாயஸ் அடிகளார் ஆகியோர் இணைந்து ஒப்புக்கொடுத்துள்ளனர்.

பெருவிழா கூட்டுத் திருப்பலியைத் தொடர்ந்து புனிதரின் இறுதி ஆசீருடன் கொடியிறக்கப்பட்டு பெருவிழா இனிதே நிறைவுபெற்றது. பெருவிழா திருப்பலியில் இயேசு சபைத் துறவிகள், பொது நிலையினர், பங்கு மக்கள் மற்றும் வெளிப்பங்கு மக்கள் என பெருமளவிலானோர் கலந்துகொண்டதுடன், பெருவிழா சிறப்பு நிகழ்வாக அன்னதான குழுவினால் அன்னதானம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# கடலால் காவுகொள்ளப்படும் நிந்தவூர் கடற்கரை பிரதேசம்; உயிர் அச்சுறுத்தலை தடுத்து வாழ்வாதாரத்துக்கு வழியமைக்குக!

## கரையோர பாதுகாப்புத் திணைக்களத்திடம் பொதுமக்கள் கோரிக்கை






(அம்பாறை நிருபர்)

அம்பாறை மாவட்டம், நிந்தவூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகள் பாரிய கடலரிப்புக்கு உள்ளாகி வருகின்றன. கடற்கரைப் பகுதியிலுள்ள சுமார் 100 மீற்றருக்கு அதிகமான நிலப்பரப்பு கடலால் காவுகொள்ளப்பட்டுள்ளதுடன், 75இற்கும் மேற்பட்ட காணிகள் மற்றும் தென்னந்தோட்டங்களும் கடலரிப்பால் அழிந்துள்ளன. இத்தகைய தாக்கங்களை ஏற்படுத்திக்கொண்டிருக்கும் கடலரிப்பை தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திடீர் காலநிலை மாற்றங்களினால் கடலரிப்பு அதிகமாக ஏற்படுவதுடன், கரையோர மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் வெகுவாக பாதிக்கப்படுகின்றனர். கடந்த சில நாட்களாக ஏற்பட்ட கடலரிப்பினால் இப்பிரதேச கடற்கரைப் பிரதேசத்தில் தென்னை மரங்கள் வீழ்ந்துள்ளதுடன், கரையோரங்களில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டடங்களின் ஒரு பகுதி முற்றாக இடிந்து கடலுக்குள் வீழ்ந்துள்ளதை காணமுடிகின்றது.

மேலும், கடலரிப்பினால் அப்பகுதியில் போக்குவரத்து செய்வதில் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதுடன், கடந்த சுனாமி பேரலைத் தாக்கத்தில் பாதிக்கப்பட்ட இப்பிரதேச மக்கள் அச்சமடைந்த நிலையில் காணப்படுகின்றனர். இதேவேளை, அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் தீவிரமடைந்துவரும் கடலரிப்பின் காரணமாக பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை மக்கள் இழந்துவருவதோடு, அங்குள்ள மீனவர்களும் தொழில் நடவடிக்கைகளில் பெரிய இடர்களை எதிர்கொண்டு வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக, அம்பாறை மாவட்டத்தில் நிந்தவூர் கரையோரப் பிரதேசத்தில் கடந்த சில தினங்களாக கடலரிப்பு அதிகரித்து வருகின்றமையை தடுக்கவும் நிரந்தரமாக கடலரிப்பை தடுக்கவும் நடவடிக்கை முன்னெடுக்க பல்வேறு தரப்பினர் கருத்துகளை தெரிவித்து வருகின்றனர். அம்பாறை மாவட்டம், நிந்தவூர் பிரதேசத்தில் கடற்கரை சார்ந்த பகுதிகளில் ஏற்பட்டுள்ள கடலரிப்பை தடுக்கும் முகமாக கரையோரம் பேணல் திணைக்களத்தினால் 100 மீற்றர் நீளத்துக்கு கற்களைக்கொண்டு தடுப்புச்சுவர் அமைக்கும் வேலைகள் கடந்த காலங்களில் மீன்பிடி நடவடிக்கைகள் நடைபெறாத பகுதிகளில் நடைமுறைப்படுத்தபட்டு வருவதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கைக்காக பயன்படுத்தப்படுகின்ற பகுதிகளில் கற்களைக்கொண்டு தடுப்புச்சுவர் அமைப்பது அவர்களின் நாளாந்த தொழிலுக்குத் தடையாக அமையும் என்பதனால் கரையோர பாதுகாப்பு மற்றும் கடல்வள முகாமைத்துவ திணைக்களத்தினால் இப்பகுதியில் (Geo bag) மண் மூடைகள் இடுவதற்காக திட்டமிடப்பட்டிருந்ததுடன், ஜியோ பேக் (Geo Bag) பைகளில் மண் இட்டு நிரப்பி கடலரிப்பை தடுக்கும் முறைகள் தொடர்பில் கரையோர பாதுகாப்பு மற்றும் கடல்வள முகாமைத்துவ திணைக்களத்தினால் பல மில்லியன் ரூபா செலவில் நடைமுறைப்படுத்தப்பட இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## திருகோணமலை அக்போகம பகுதியில் கற்பாறைக்குள்ளிருந்து கைக்குண்டு மீட்பு

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தின் அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்போகம பகுதியில் கற்பாறைக்குள் மறைத்துவைத்திருந்த நிலையில், கைக்குண்டு ஒன்றினை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இக்கைக்குண்டு நேற்று முன்தினம் (14) மாலை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய் குளத்தினை அண்டிய பகுதியில் போடப்பட்டிருந்த கருங்கற்பாறைக்குள்ளே இவ்வாறு கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.

அக்போபுர பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் கந்தளாய் நீதிமன்ற நீதிவானின் உத்தரவின்பேரில் கைக்குண்டை செயழிலக்கச் செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாகவும் அக்போபுர பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## போடியார் புலம்பல்!



***மட்டக்களப்பு எம்.பி. பொடியன் சாணக்கியன் நாடாளுமன்றத்தில கதைத்தது அந்த கிழட்டு நரி ரணிலுக்கு ஆத்திரம் வந்து தாறு மாறா சின்ன பொடியன திட்டித்தீர்த்தவர் எலுவா?***

***அதுக்கு இப்ப நடுங்கி பயந்து தாம் வன்முறய ஆதரிக்காதவன் எண்டு கடிதம் அனுப்பியிருக்காரு அந்த தம்பி சாணக்கியன்.***

***அந்த கடிதத்த பார்த்தால் தாம் வன்முறய ஆதரிக்காதவன் மற்ற TNA எம்பி மாருதான் வன்முறய ஆதரிக்கிறவங்க எண்டமாதிரி எலுவா எழுதி இருக்கிறாரு. ஒண்டாம்பி நீ 2020இக்கு முந்தி மகிந்தட சிங்கள கட்சி அமைப்பாளர் எண்ட சங்கதி ரணில் அம்மாச்சிக்கு நல்லா தெரியும் தானே!***

## 8 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான 25 கிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைது




(கனகராசா சரவணன்)

காத்தான்குடி பிரதேசத்தில் 8 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான 25 கிராம் 250 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் வியாபாரி ஒருவரை நேற்று முன்தினம் (14) மாலை கைதுசெய்துள்ளதாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி. பண்டார தெரிவித்தார்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்கவின் ஆலோசனைக்கமைய குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி.பண்டார தலைமையிலான பொலிஸார் சம்பவதினமான நேற்று முன்தினம் மாலை காத்தான்குடி கடற்கரை வீதியிலுள்ள ஹோட்டல் ஒன்றுக்கு அருகாமையில் வைத்து போதைப்பொருள் வியாபாரி ஒருவரை சுற்றிவளைத்து சோதனையிட்டபோது, அவரிடமிருந்து 8 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான 25 கிராம் 250 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளை மீட்டதுடன், அவரை கைதுசெய்தனர்.

குறித்த நபர் காத்தான்குடியைச் சேர்ந்தவர் எனவும் இவர் நீண்டகாலமாக போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுவந்துள்ளதாகவும் கல்முனையிலிருந்து காத்தான்குடிக்கு வியாபாரத்துக்காக ஹெரோயினை எடுத்துக்கொண்டு வந்துள்ளதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதில் கைதுசெய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## களுவாஞ்சிக்குடி பொலிஸாரினால் பொசன் பௌர்ணமி தின தானம்



(மட்டக்களப்பு நிருபர்)

பொசன் தினத்தை முன்னிட்டு களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பொசன் கொண்டாட்டமும், மரவள்ளிக்கிழங்கு வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் (14) மாலை களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றது.

களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரி.அபேயவிக்ரமவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அப்பகுதி பிரதேச உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜெயந்த ஜெயரத்ன கலந்துகொண்டு நிகழ்வை ஆரம்பித்துவைத்தார்.

இதன்போது பொலிஸாரால் பெருமளவான மரவள்ளிக்கிழங்கு அவித்து, மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் பயணித்துக்கொண்டிருந்தவர்களுக்கும், அசசூழலிலுள்ளவர்களுக்கும் வழங்கப்பட்டன. மக்கள் அதனை விரும்பிவந்து பெற்றுச்சென்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## பாடசாலைகளில் வழக்கத்திலுள்ள கைவிரல் அடையாள இயந்திர நடைமுறையினை இரத்துசெய்ய கோரிக்கை

### இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம்

(மாளிகைக்காடு நிருபர்)

நாட்டின் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு பாடசாலைகளில் வழக்கிலுள்ள கைவிரல் அடையாள இயந்திர நடைமுறையினை இரத்துசெய்யுமாறு இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் கல்வியமைச்சுக்கு கோரிக்கையொன்றை விடுத்துள்ளது

கல்வியமைச்சுக்கு சங்கம் அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எரிபொருள் சிக்கல் காரணமாக தூர இடங்களில் உள்ள ஆசிரியர்கள் பாடசாலைகளுக்குச் செல்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். பொதுப் போக்குவரத்துக்காக பயன்பாட்டிலுள்ள வாகனங்கள் குறைவு மற்றும் தாமதம் காரணமாக உரிய நேரத்திற்கு பாடசாலைக்கு செல்லமுடியாத நிலை தோன்றியுள்ளது.

பாடசாலை சென்று பதிவிடும் நேரத்தை கைவிரல் அடையாள இயந்திரங்கள் கணக்கிடுவதனால் தேவையற்ற கட்டாய விடுமுறையை ஆசிரியர்கள் அனுவிக்கவேண்டி வருகின்றது. மலையிலிருந்து விழுந்தவனை மாடேறி மிதித்ததுபோன்ற நிலைக்கு ஆசிரியர்கள் ஆளாகிவருகின்றனர். இந்நிலை தொடருமானால் நல்லதொரு மனநிலையில் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாத சூழ்நிலையே ஏற்படுகிறது. இந்நிலையிலிருந்து விடுவிப்பதற்காக பாடசாலைகளில் நடைமுறைகளிலுள்ள குறிப்பாக வடக்கு, கிழக்கு பாடசாலைகளிலுள்ள கைவிரல் அடையாள இயந்திர நடைமுறையினை இரத்து செய்யுமாறு அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணப் பாடசாலைகளிலுள்ள சில அதிபர்கள் நாட்டின் சூழ்நிலைகளைக் கவனத்தில் எடுக்காது மனிதாபிமானமற்ற முறையில் நடந்துகொள்ளவதாகவும் ஆசிரியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அவ்வாறான அதிபர்கள் தொடர்பில் எமது சங்கம் தகவல்களைத் திரட்டி வருவதாகவும் இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

## எடின்பரோ கோமகன் சர்வதேச விருதின் ஆரம்ப பயிற்சிப்பட்டறை சாய்ந்தமருதில்




(அம்பாறை நிருபர்)

ஜீனியஸ் 7 விருதுப் பிரிவின் ஏற்பாட்டில் எடின்பரோ கோமகன் சர்வதேச விருதின் ஆரம்ப பயிற்சிப்பட்டறையும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் சாய்ந்தமருது கமு/அல்ஹிலால் வித்தியாலய மண்டபத்தில் ஜீனியஸ் 7 விருதுப் பிரிவின் தலைவரும் முன்னாள் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினருமான இஷட்.எம்.சாஜீத் தலைமையில் நடைபெற்றது.

இச்செயலமர்வின்போது ஜீனியஸ் 7 விருதுப் பிரிவில் வெண்கலம், வெள்ளி, தங்க விருதுகளுக்கு விண்ணப்பித்து விருது செயற்பாடுகளில் ஈடுபடவுள்ள இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டதுடன், இதன்போது வெளிக்கள சாகசப் பயணத்தின்போது சர்வதேச நியமங்களுக்கு அடிப்படையில் கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய விடயங்கள் ஆரம்ப பயிற்சியாக வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை பொதுச் சேவைகள் ஆணைக்குழு உறுப்பினர் மற்றும் முன்னாள் சட்டம், ஒழுங்கு அமைச்சின் மேலதிக செயலாளர் ஏ.எல்.எம்.சலீம், விசேட அதிதியாக சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசீக், கௌரவ அதிதிகளாக முன்னாள் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் எம். ஐ.எம்.சதாத், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற முன்னாள் உதவிப் பணிப்பாளர் எஸ்.எம்.ஏ.லத்தீப், சாய்ந்தமருது பிரதேச செயலக நிதி உதவியாளார் எம்.முஹம்மட், சாய்ந்தமருது இளைஞர் பயிற்சி நிலையப் பொறுப்பதிகாரி எ.ஏ.எம்.ஹாரூன், சாய்ந்தமருது பிரதேச செயலக இளைஞர் சேவை அதிகாரி எம்.எம்.இஷட் இலாஹி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் வசந்தம் தொலைக்காட்சி சிரேஷ்ட அறிவிப்பாளார் ரோசன் அஷ்ரப் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

மேலும் இச்செயலமர்வில் கலந்து கொண்ட அனைத்து இளைஞர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

எடின்பரோ கோமகன் சர்வதேச விருதுக்கு 14 - 24 வயதுக்குட்பட்ட இளைஞர், யுவதிகளின் ஆளுமை, நுண்ணறிவு, வெளிக்கள ஆய்வு, தலைமைத்துவம், ஆற்றல், கல்வி, திறமை, விளையாட்டு, சர்வதேச தொடர்புகளுடைய இளைஞர், யுவதிகளுக்கு வழங்கப்படுகின்றதொரு சர்வதேச விருதாகும்.

இவ்விருது நிகழ்வானது 1956இல் பிரித்தானிய முடிக்குரிய அரசால் ஆரம்பிக்கப்பட்டு தற்போது 140இற்கும் மேற்பட்ட நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எடின்பரோ சர்வதேச கோமகன் விருதுக்குரிய தலைமைக் காரியாலயம் லண்டன் மாநகரிலும் இலங்கைக்குரிய பிராந்திய காரியாலயம் அவுஸ்திரேலியாவிலும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.






***மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸாரினால் பொசன் பௌர்ணமி தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது. பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஹர்ச ஜெயசில்வா இதனை ஏற்பாடு செய்திருந்தார். வீதியால் சென்றோருக்கு இனிப்புப் பண்டங்கள் பரிமாறப்பட்டதுடன், குளிர்பானமும் வழங்கப்பட்டது. புரிந்துணர்வு, நல்லிணக்கம் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு புத்தபெருமானின் நற்சிந்தனையின்படி இந்நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.***


***(படங்கள் - வாழைச்சேனை நிருபர்)***

# உலக செய்திகள்

## 113ஆவது நாளாகவும் தொடரும் உக்ரைன் - ரஷ்யப் போர்

# அகழிகளில் பதுங்கியிருக்கும் ரஷ்ய வீரர்களை குறிவைத்து உக்ரைன் படைகள் தாக்குதல்





முதலாம் உலகப் போரில் நடைபெற்றதைபோல், அகழிகளில் பதுங்கியிருக்கும் ரஷ்ய வீரர்களை குறிவைத்து உக்ரைன் படைகள் தாக்குதல் நிகழ்த்தி வருகின்றன.

முதலாம் உலகப் போரில் அகழிகள் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதலால் அதில் பதுங்கியிருந்த எதிரி படைகளுக்கு பெரும் உயிர்ச்சேதங்கள் விளைவிக்கப்பட்டன. தற்போது அதே பாணியில் அகழிகளில் பதுங்கியிருக்கும் ரஷ்ய வீரர்கள் மீது உக்ரைன் படைகள் ட்ரோன் மூலம் குண்டு வீசி வருகின்றன.

அந்த காணொளியை சமூக வலைத்தளத்தில் வெளியிட்ட உக்ரைன் இராணுவம், தங்கள் நாட்டை ஆக்கிரமித்துள்ளவர்களுக்குத் தகுந்த உபசரிப்பு அளித்து வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

நேட்டோ கூட்டமைப்பில் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா போர்த் தொடுத்தது. இந்தப் போர் இன்று 113ஆவது நாளாகவும் தொடர்ந்தும் நடைபெற்று வருகிறது. போரால் உக்ரைன் தலைநகர் கீவ் உட்பட பல்வேறு நகரங்கள் உருக்குலைந்துள்ளதுடன்,

### 7.5 இலட்சம் பேர் அகதிகளாக அண்டைநாடுகளில் தஞ்சம்

7.5 இலட்சத்துக்கும் அதிகமானோர் உக்ரைனிலிருந்து வெளியேறி அண்டைநாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

**சிவிரோடொனெட்ஸ்க் நகருக்கான அனைத்து பாலங்களையும் தகர்ப்பு**

உக்ரைனில் போர் தீவிரமடைந்துள்ள சிவிரோடொனெட்ஸ்க் நகருக்கு செல்லக்கூடிய அனைத்து பாலங்களையும் ரஷ்ய இராணுவம் தகர்த்துவிட்டதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

இது குறித்து பேசிய லுஹான்ஸ்க் ஆளுநர் செர்ஹி ஹைடாய், பாலங்கள் அனைத்தும் தகர்க்கப்பட்டதால் சிவிரோடொனெட்ஸ்க்கில் வசிக்கும் மக்களுக்கு பொருட்களை வழங்குவதும் அங்கிருந்து மக்களை வெளியேற்றுவதும் சாத்தியமற்றது என்றும், மக்கள் மிகவும் கடினமான சூழ்நிலையில் வாழவேண்டிய கட்டாயத்தில் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய எல்லையை ஒட்டியிருக்கும் டான்பாஸ் பிராந்தியத்தை முழுமையாக கட்டுக்குள் கொண்டுவர Severodonetsk மற்றும் Lysychansk பகுதிகளில் ரஷ்ய இராணுவம் தொடர் தாக்குதலை நடத்தி வருகிறது.

**உக்ரைனின் இராணுவ ஆயுதக்கிடங்கை அழிப்பு**

இதேவேளை, உக்ரைனின் செர்னிஹிவ் பகுதியிலுள்ள இராணுவ ஆயுதக்கிடங்கை கலிப்ர் கப்பல் ஏவுகணைகளால் தாக்கி அழித்ததாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

கடந்த 24 மணிநேரத்தில் உக்ரைனின் MiG-29 போர் விமானத்தையும், Mi-24 ஹெலிகொப்டரையும் ரஷ்ய வான் பாதுகாப்புப் படைகள் சுட்டு வீழ்த்தியதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு செய்தித் தொடர்பாளர் இகோர் கொனாஷென்கோவ் தெரிவித்துள்ளார்.

## நவல்னி சிறையிலிருந்து இரகசிய இடத்துக்கு மாற்றம்



ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவல்னி, 11 ஆண்டுகளுக்கு மேல் சிறைத்தண்டனை பெற்ற நிலையில், சிறையிலிருந்து திடீரென இரகசியமான இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினின் அரசு மீது அவர் அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளையும் விமர்சனங்களையும் செய்து வந்தார்.

''அலெக்ஸி இப்போது எங்கே இருக்கிறார், அவர் எங்கு அழைத்துச் செல்லப்படுகிறார், எங்களுக்குத் தெரியாது'' என்று அவருடைய உதவியாளர் வோல்கோவ் தெரிவித்துள்ளார்.

## குரங்கு அம்மை நோய் பரவல்:




## பொதுச் சுகாதார அவசரநிலையாக அறிவிக்க முக்கிய ஆலோசனை

உலகம் முழுவதும் 39 நாடுகளில் 1,600இற்கும் மேற்பட்டோருக்கு குரங்கு அம்மை உறுதிசெய்யப்பட்டுள்ள நிலையில், நோய் தொற்றுப் பரவல் தொடர்பாக அவசரக் கூட்டத்தை நடத்தவுள்ளதாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

சர்வதேச அளவில் கொரோனா போன்று பொதுச் சுகாதார அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட வேண்டுமா என்பதை ஆராய்ந்து முடிவெடுக்க இந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இதுகுறித்து பேசிய உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதனோம், குரங்கு அம்மை நோய் பரவல் அசாதாரண மானதாகவும் கவலைக்குரியதாகவும் உள்ளதாக தெரிவித்தார்.

## உலகின் மிக உயரமான தபால் நிலையம்



உலகின் மிக உயரமான தபால் நிலைய அலுவலகம் தபால் பெட்டி வடிவில் கட்டப்பட்டுள்ளது.

இமாச்சல பிரதேசத்தின் ஸ்பிட்டி மாவட்டத்திலுள்ள ஹிக்கிம், உலகிலேயே மிக உயரமான கிராமமாகும். இது கடல் மட்டத்திலிருந்து சுமார் 14,400 அடி உயரத்திலுள்ளது.


சுற்றுலாப் பயணிகள் வருகை தரும் இந்தக் கிராமத்தில் அமைந்துள்ள தபால் நிலையம் உலகின் மிக உயரமான தபால் நிலையமாகும். இந்தத் தபால் நிலையம் 1983ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிலையில், சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில், இங்குள்ள தபால் நிலையத்தை தபால் பெட்டி வடிவத்தில் கட்டியுள்ளனர். இந்த தபால் நிலையத்தை இமாச்சல பிரதேச தலைமை தபால் அதிபர் வந்திதா கவுல் திறந்துவைத்தார்.

இது தொடர்பாக வந்திதா கவுல் தெரிவிக்கையில்,

''இங்குள்ள தபால் நிலையம்போல் நாட்டில் வேறெங்கும் இல்லை. அதுவே ஈர்ப்பு மையம். உலகம் முழுவதும் இருந்துவரும் சுற்றுலாப் பயணிகள் இங்கிருந்து தங்களது அன்பானவர்களுக்கு கடிதங்களை அனுப்புகிறார்கள். சுற்றுலாவின் பார்வையில் இது மிகவும் முக்கியமானது என்பதை நிரூபிக்கும்'' என தெரிவித்துள்ளார்.

## 6 மணிநேரத்தில் 24 முட்டைகளை இட்டு சாதனை படைத்த சின்னு



கேரளாவில் கோழியொன்று 6 மணி நேரத்தில் 24 முட்டைகளை இட்டு ஆச்சரியப்படுத்தியுள்ளது.

கேரள மாநிலம் ஆலப்புழா அருகே அம்பலப்புழா பகுதியை சார்ந்த பிஜு என்பவர் கடந்த 7 மாதங்களுக்கு முன்பு 20இற்கும் மேற்பட்ட bv -380 ரக கோழிகளை வாங்கியுள்ளார். அதில் ஒரு கோழி பிஜு வின் மகளை வெகுவாகக் கவர்ந்துள்ளது.

இதையடுத்து அவரது மகள், கோழிக்கு 'சின்னு' என்று பெயரிட்டு வளர்த்து வந்துள்ளார். இந்நிலையில், திங்கட்கிழமை சின்னு தனது காலை தூக்கி நடக்க, காலில் அடிபட்டிருக்கும் என பிஜு சின்னுவின் காலில் தைலம் போட்டுவிட்டுள்ளார்.

காலை சுமார் 8:30 மணியளவில் கோழி முதலில் ஒரு முட்டை இட்டுள்ளது, சிறிதுநேரத்திலேயே அடுத்தடுத்து 24 முட்டைகளை போட்டு வீட்டாரையே ஆச்சரியப்படுத்தியுள்ளது. தற்போது சின்னு கோழி இணையத்தளத்தில் வைரலாகியுள்ளது.

## கிரீஸில் தென்பட்ட ஸ்ட்ரோபெரி சூப்பர் மூன்



கிரீஸில் சந்திரகிரகணத்தின் ஸ்ரோபெரி சூப்பர் மூன் தெளிவாக காணப்பட்டது.

பூமியின் அருகில் வரும் நிலவு வழக்கத்திற்கு மாறாக பெரிதாக காட்சியளிக்கும். அமெரிக்காவில் ஜூன் மாதம் ஸ்ரோபெரி பழங்கள் அறுவடை காலம் என்பதால் நிலவுக்கு ஸ்ரோபெரி சூப்பர் மூன் என பெயரிடப்பட்டுள்ளது.

புராதன கிரேக்க ஆட்சியாளர் பசைடன் கோவிலின் பின் ஸ்ரோபெரி மூன் பெரியதாக தென்பட்டது. ஸ்ரோபெரி மூன் வானோக்கி எழும் ட்ரோன் காட்சி வெளியாகியுள்ளது.

## புட்டினின் மலக்கழிவுகளை பத்திரப்படுத்தும் பாதுகாவலர்கள்




ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் வெளிநாடு செல்லும்போது, அவரது மலத்தை பத்திரமாக பெட்டியில் வைத்து ரஷ்யா எடுத்துவருவதாக புதிய தகவல் வெளியாகியுள்ளது.

பிரபல புலனாய்வு ஊடகவியலாளர்களான ரெஜிஸ் ஜென்டே, மிகைல் ருபெயன் இருவரும் பிரான்ஸிலிருந்து வெளியாகும் 'பெரிஸ் மேட்ச்' செய்தி பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதியுள்ளனர். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

புட்டின் வெளிநாடு சென்றால், அங்கு கழிப்பறையில் அவரது மலத்தை சேகரித்து பெட்டியில் வைத்து ரஷ்யா எடுத்து வரும் வேலையை அவரது பாதுகாவலர்கள் செய்து வருகின்றனர்.

மல சோதனையில் புட்டின் உடல்நிலை குறித்த எந்த தகவல்களும் வெளிநாடுகளுக்கு கிடைக்கக்கூடாது என்பதற்காகவே இந்த முறை பின்பற்றப்படுகிறது. இதன்படி, 2017இல் புட்டின் பிரான்ஸ் சென்றபோதும், 2019இல் சவூதி அரேபியா சென்றபோதும், அவரது மலத்தை பாதுகாவலர்கள் சூட்கேஸில் வைத்து ரஷ்யாவுக்கு எடுத்து வந்தனர்.

இதை உறுதிசெய்யும் வகையில், 2019இல் புட்டின் மீண்டும் பிரான்ஸ் சென்றபோது கண்காணிப்பு கெமராவில் ஒரு காட்சி பதிவாகியுள்ளது. அதில், கழிப்பறைக்குச் செல்லும் புட்டினுக்கு பாதுகாப்பாக ஆறு பேர் உடன் செல்கின்றனர்.

புட்டின் வெளியே வந்ததும் பாதுகாவலர்களில் ஒருவர் சிறிய சூட்கேஸுடன் அவர் பின்னால் வெளியே வருவது பதிவாகியுள்ளது. அந்த சூட்கேஸில் என்ன உள்ளது என்பதை உறுதியாக சொல்ல முடியவில்லை என்றபோதிலும் அது, புட்டினின் மலக்கழிவுதான் என நம்பப்படுகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்துள்ள நிலையில், புட்டின் முக்கிய நிகழ்ச்சிகளில் பங்கேற்காமல் உள்ளது. அவர் உடல்நிலை குறித்து பல்வேறு சந்தேகங்களை எழுப்பியுள்ளது. அவருக்கு இரத்த புற்றுநோய் இருப்பதாகக் கூறப்படும் நிலையில், புட்டின் தன் உடல்நிலை குறித்து வெளிநாட்டு உளவாளிகளுக்கு தெரியக் கூடாது என நினைக்கிறார்.

சீன ஜனாதிபதியாகவிருந்த மறைந்த மாசேதுங் உள்ளிட்ட முக்கிய தலைவர்களின் மலத்தை ரஷ்ய சர்வாதிகாரி ஜோசப் ஸ்டாலின் சோதிக்க உத்தரவிட்டதற்கான ஆதாரங்கள் உள்ளதாக முன்னாள் இராணுவ வீரர் ஒருவர் சில ஆண்டுகளுக்கு முன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### பிரிவை அறிவித்த...

## உலகப் புகழ்பெற்ற BTS பொப் இசைக்குழு





தென் கொரியாவைச் சேர்ந்த பொப் இசைக்குழு பீடிஎஸ் (BTS). உலகம் முழுவதும் இவர்களுக்கு கோடிக்கணக்கான இரசிகர்கள் இருக்கின்றனர். இசையால் பல உள்ளங்களைக் கட்டிப்போட்டு இந்தக் குழு தனது பிரிவை அறிவித்துள்ளது.

அந்தக் குழுவிலுள்ள 7 பேரும் இனி தனித்தனியாக இயங்கப்போவதாக அறிவித்துள்ளனர். இவர்களால் தென் கொரிய பொருளாதாரத்திற்கு பில்லியன் டொலர் கணக்கில் வருவாய் கிடைத்துக்கொண்டிருந்தது. இவர்களின் பிரிவு தென் கொரிய அரசையும், உலக பொப் இசை ரசிகர்களையும் கவலையில் ஆழ்த்தியுள்ளது. பிடிஎஸ் குழுவிலுள்ள அனைவருமே 20 வயதுகளில் உள்ளவர்களே. லிப்ஸ்டிக்கும், விதவிதமான காதணிகளும், உள்ளம் கவர் குரலும், இசையுமே இவர்களின் அடையாளம்.

கடந்த 9 ஆண்டுகளாக இந்த இசைக்குழு ஏராளமான பொப் இசைப் பாடல்களைப் பாடி ரசிகர்களை மகிழ்வித்து வந்தது.

இந்நிலையில், அவர்கள் தனித்தனியாக இயங்கப்போவதாக அறிவித்தனர். பிடிஎஸ் குழுவின் ஆண்டு விழா கொண்டாட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் அவர்கள் இந்த அறிவிப்பை வெளியிட்டனர்.

இருப்பினும், ''பொப் இசைக் குழுவை கலைக்கவில்லை. காலவரையற்ற பிரிவில் செல்கிறோம். எப்போது வேண்டுமானாலும் மீண்டும் இணையலாம்'' என்ற ஆறுதல் தகவலை ரசிகர்களாகத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான யூடியூப் வீடியோவில் குழுவின் உறுப்பினர் RM தெரிவிக்கையில்,

"பிடிஎஸ் குழு மற்ற இசைக் குழுக்களைவிட வித்தியாசமானது என்று எனக்குத் தெரியும். ஆனால், இதுபோன்ற இசைக்குழுக்களில் இருந்தால் தனிப்பட்ட முறையில் வளர்ச்சி காணமுடியவில்லை. எப்போது பார்த்தாலும் இசையமைக்க வேண்டும் அது தொடர்பாகவே ஏதாவது செய்யவேண்டும். ஒரு தனிநபராக 10 ஆண்டுகளில் நான் நிறைய மாறிவிட்டேன். எனக்கு தனியாக இருக்க கொஞ்ச அவகாசம் தேவைப்படுகிறது'' - என்றார்.

குழுவின் மற்றொரு உறுப்பினரான ஜிம் தெரிவிக்கையில்,

''எங்களின் முடிவுகளால் ரசிகர்கள் கவலையடையலாம். இதுவரை ரசிகர்கள் விரும்பும் கலைஞர்களாக இருந்துவிட்டோம். இனி நாங்கள் என்னமாதிரியான கலைஞராக இருக்கவேண்டுமோ அப்படி இருப்போம்'' - என்றார்.

வீடியோ முடியும்போது பிடிஎஸ் குழுவினர் அனைவருமே கண் கலங்கி உடைந்து அழுதனர். பிடிஎஸ் பிரிவு அறிவிப்பு வீடியோ இணையத்தில் மில்லியன் கணக்கில் வைரலாகிறது.

கே பொப் (KPop), கே டிராமா (KDrama) என்பதெல்லாம் சர்வதேச ஷோபிஸ் உலகில் மிகவும் பிரபலம். கே என்பது கொரியாவை குறிப்பது. பிடிஎஸ் கொரிய பொப் குழு என்பதால் அவர்களின் இசை கே பொப் என்றழைக்கப்படுகிறது. கொரியாவில் உருவாகும் நாடகங்களும் அனைத்து தரப்பினரிடையேயும் பிரபலம். அவற்றை கே டிராமா என பொதுவாக அழைக்கின்றனர்.

# ஜுலை 18இல் 16ஆவது இந்திய ஜனாதிபதித் தேர்தல்

- பொது வேட்பாளரை தெரிவுசெய்வதில் ஆளுங்கட்சிக்குள் குழப்பம்
- பா.ஜ.கவை எதிர்த்து வேட்பாளரை நிறுத்த எதிர்க்கட்சிகள் முடிவு
- 22 எதிர்க்கட்சிகளுக்கு மம்தா அழைப்பு; கூட்டத்தை புறக்கணித்த சந்திரசேகர ராவ்

இந்திய ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த்தின் பதவிக்காலம் அடுத்த மாதம் முடிவடையவுள்ள நிலையில், நாட்டின் 16ஆவது ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் எதிர்வரும் ஜூலை 18ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த்தின் பதவிக்காலம் அடுத்த மாதம் 24ஆம் திகதி முடிகிறது. புதிய குடியரசுத் தலைவர் ஜூலை 25ஆம் திகதி பதவியேற்க வேண்டும். அதற்குள் புதிய குடியரசுத் தலைவரைத் தெரிவுசெய்ய வேண்டும்.

இதற்கான தேர்தல் அடுத்த மாதம் 18ஆம் திகதி நடைபெறுவதையொட்டி, வேட்புமனு தாக்கல் நேற்று இடம்பெற்றது.

இதில், ஆளும் பா.ஜ.க. தரப்பில் வேட்பாளராக நிறுத்தப்படுவது யார் என்பது இன்னும் முடிவாகவில்லை. இதுதொடர்பாக உட்கட்சியிலும், எதிர்க்கட்சியிலும் ஆதரவை திரட்ட ராஜ்நாத் சிங், ஜே.பி.நட்டா ஆகியோர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பா.ஜ.கவை எதிர்த்து பொது வேட்பாளரை நிறுத்த எதிர்க்கட்சிகள் முடிவு செய்துள்ளன. இதுதொடர்பாக முக்கிய ஆலோசனை நடத்த காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட 22 எதிர்க்கட்சிகளுக்கு மேற்கு வங்க முதலமைச்சரும், திரிணாமுல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பெனர்ஜி கடந்த 11ஆம் திகதி கடிதம் மூலம் அழைப்பு விடுத்தார்.

மம்தாவின் அழைப்பின்பேரில், ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரை முடிவு செய்வதற்கான எதிர்க்கட்சிகளின் முக்கிய ஆலோசனைக் கூட்டம் டில்லியில் நடைபெற்றது.

இதில், தி.மு.க. சார்பில் கட்சியின் மக்களவை குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, காங்கிரஸ் சார்பில் மூத்த தலைவர்களான மல்லிகார்ஜுனா கார்கே, ஜெய்ராம் ரமேஷ், ரன்தீப் சுர்ஜிவாலா ஆகியோர் பங்கேற்கின்றனர். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகளும் இக்கூட்டத்தில் பங்கேற்றன.

இந்நிலையில், குடியரசுத் தலைவர் பொது வேட்பாளரை அறிவிப்பது தொடர்பாக திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் மேற்குவங்க முதலமைச்சருமான மம்தா பெனர்ஜி அழைப்பு விடுத்துள்ள கூட்டத்தைப் புறக்கணிப்பதாக தெலுங்கானா ராஷ்ட்ரீய சமிதி கட்சியின் தலைவரும் அம்மாநில முதலமைச்சருமான சந்திரசேகர ராவ் அறிவித்துள்ளார். அதேபோல், ஆலோசனை கூட்டத்தை ஆம் ஆத்மி கட்சியும் புறக்கணித்துள்ளது. ஜனாதிபதி வேட்பாளரை தெரிவுசெய்த பின்னரே எங்களது நிலைப்பாட்டை அறிவிப்போம் என்று ஆம் ஆத்மி தெரிவித்துள்ளது.




# உ.பியில் புல்டோசர் இடிப்பு நடவடிக்கை மனித உரிமை மீறல்

**உச்ச நீதிமன்றம் தலையிடக் கோரி முன்னாள் நீதிபதிகள் கடிதம்**



உத்தரப்பிரதேசத்தில் புல்டோசர் கொண்டு குடியிருப்புகள் இடிக்கப்பட்டு வருகின்றமையும் பலர் கைதுசெய்யப்பட்டு வருகின்றமையும் சட்ட விரோதமானவை. எனவே, இதன் மீது உயர் நீதிமன்றம் தாமாக முன்வந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரிக்கை விடுத்து நீதிபதிகள் கடிதமொன்றை எழுதியுள்ளனர்.

இறைதூதரான நபிகள் நாயகம் குறித்து பா.ஜ.க. செய்தித்தொடர்பாளர் நுபுர் சர்மா, பா.ஜ.க. டில்லி ஊடகப் பிரிவுத் தலைவர் நவீன் ஜிண்டால் ஆகியோர் தெரிவித்த சர்ச்சைக்குரிய கருத்துக்கு முஸ்லிம் சமூகத்தினர் மத்தியில் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. கட்டார், சவூதி அரேபியா, ஈரான், ஈராக் உள்ளிட்ட 15 இஸ்லாமிய நாடுகள் கடும் எதிர்ப்பையும் கண்டனத்தை தெரிவித்தன. இதனையடுத்து மேற்குறித்த நாடுகளில் இந்தியப் பொருட்கள் நிராகரிக்கப்பட்டதுடன், விற்பனையையும் இடைநிறுத்தின.

இதையடுத்து நுபுர் சர்மா மற்றும் நவீன் ஜிண்டால் ஆகியோர் பா.ஜ.கவிலிருந்து நீக்கப்பட்டதுடன், அவர் மீது வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், இருவரின் சர்ச்சைக்குரிய கருத்துகளுக்கு கண்டனம் தெரிவித்து ஜோர்க்கண்ட் தலைநகர் ராஞ்சியில் முஸ்லிம்கள் வெள்ளிக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை பொலிஸார் கலைக்க முயன்றபோது, போராட்டக்காரர்கள் சிலர் பொலிஸார் மீது கல்வீச்சு நடத்தினர். போராட்டம் வன்முறையாக மாறி போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே மோதலுக்கு வழிவகுத்தது. பொலிஸார் மீது போராட்டக்காரர்கள் கற்களை வீசினர். அவர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இந்த வன்முறையில் முகமது முதாசிர் கைஃபி (வயது 22), முகமது சஹீல் (வயது 24) ஆகிய இருவர் தோட்டா பாய்ந்து உயிரிழந்தனர். பொலிஸ் மற்றும் சிஆர்பிஎவ்வைச் சேர்ந்த 12 பேர் உட்பட 24 பேர் பலத்த காயமடைந்தனர்.

எனினும், அவரை கைதுசெய்யக் கோரி இந்தியாவின் பல இடங்களில் முஸ்லிம்கள் போராட்டம் நடத்தினர். இதில் உத்தரப்பிரதேசத்தில் வெடித்த கலவரத்தில் கைது நடவடிக்கை தொடர்கிறது. அலகாபாத் கலவரத்தின் முக்கிய குற்றவாளியான முகம்மது ஜாவீதின் குடியிருப்பு புல்டோசரால் இடிக்கப்பட்டது. இதற்கு ஜாவீத் தனது வீட்டை சட்ட விரோதமாகக் கட்டியதே காரணம் எனக் கூறப்பட்டாலும், இதுபோன்ற இடிப்பு நடவடிக்கை உ.பியில் தொடர்கிறது. இதே கலவரம் தொடர்பாக மேலும் 37 குற்றவாளிகளின் வீடுகளை இடிக்க அலகாபாத் வளர்ச்சி ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது. இச்சூழலில் தலைமை நீதிபதி என்.வி.ரமணாவுக்கு உச்ச நீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதிகள் மற்றும் மூத்த வழக்கறிஞர்கள் 12 பேர் நேற்றுமுன்தினம் கடிதம் எழுதியுள்ளனர்.

அந்தக் கடிதத்தில், ''உத்தரப்பிரதேசத்தில் சட்டம், ஒழுங்கு சீர்குலைவதை தடுக்க உச்ச நீதிமன்றம் தாமாக முன்வந்து நடவடிக்கை எடுக்கவேண்டும். குறிப்பாக, மாநில நிர்வாகமும், பொலிஸாரும் செய்துவரும் சட்டமீறலில் கைதுசெய்வது அவசியம். போராடுபவர்களின் குறைகளைக் கேட்டு அமைதியாகப் போராடும் சட்டப்படியான சூழலை ஏற்படுத்தித் தருவதை விடுத்து, அவர்கள் மீது கலவர நடவடிக்கை எடுத்திருப்பது மிகவும் தவறானது.

இதுபோல் போராட எவரும் முன்வராத வகையில் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாநிலத்தின் முதலமைச்சரே ஊக்கப்படுத்தியும் வருகிறார். இதனால் பொலிஸார், அதிகாரிகள் உற்சாகமுடன் சட்டவிரோதமாக கொடூர நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். இப்பிரச்சினையில் 300இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டதும் குடியிருப்புகள் இடிக்கப்பட்டதும் சட்டவிரோதமானவை. எனவே, இதன் மீது உயர் நீதிமன்றம் தாமாக முன்வந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்" எனக் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தக் கடிதத்தில், உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதிகள் பி.சுதர்ஷன் ரெட்டி, வி.கோபால கவுடா, ஏ.கே.கங்குலி, டில்லி உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி ஏ.பி.ஷா, சென்னை உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி கே.சந்துரு, கர்நாடக உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி முகம்மது அன்வர் ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர்.

மூத்த வழக்கறிஞர்களான சாந்தி பூஷண், இந்திரா ஜெய்சிங், சந்தர் உதய்சிங், ஸ்ரீராம் பஞ்சு, பிரசாந்த பூஷண், ஆனந்த் குரோவர் ஆகியோரும் கையொப்பமிட்டுள்ளனர்.

# சத்தீஸ்கரில் ஆழ்துளைக் கிணற்றில் வீழ்ந்த சிறுவன் 105 மணிநேர போராட்டத்துக்குப் பின் உயிருடன் மீட்பு









சத்தீஸ்கரில் ஆழ்துளைக் கிணற்றில் வீழ்ந்த 105 மணிநேரத்திற்கும் மேலாக போராடிய சிறுவன் பத்திரமாக மீட்கப்பட்டான்.

Janjgir-Champa மாவட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை வீட்டின் பின்புறத்திலிருந்த பாழடைந்த ஆழ்துளைக் கிணற்றில் சிறுவன் ராகுல் ஷாகு (வயது 11) தவறி விழுந்தான்.

60 அடி ஆழத்தில் சிக்கியிருந்த சிறுவனை மீட்கும் முயற்சியில் இந்திய இராணுவம், தேசிய பேரிடர் மீட்புப் படை மற்றும் மாவட்ட நிர்வாகம் ஈடுபட்டன. 105 மணிநேர போராட்டத்துக்குப் பின்னர் சிறுவன் ராகுல் ஷாகு பத்திரமாக மீட்டகப்பட்டான்.

முதலில் ஆழ்துளைக் கிணற்றுக்கு அருகே இராட்சத சுரங்கம் தோண்டப்பட்டது. ஆழ்துளைக் கிணற்றில் சிக்கித் தவித்த சிறுவன் ராகுலுக்கு குழாய் வழியாக ஒட்சிசன் வழங்கப்பட்டு வந்தது. சிறுவன் அச்சமின்றி ஒத்துழைப்பு வழங்கியதால் மீட்புப் படையினர் நம்பிக்கை தளராமல் பணிகளை தொடர்ந்தனர். ஆனால், சுரங்கப்பாதை தோண்டிய சில அடி ஆழத்தில் பாறைகள் தென்பட்டதால் தொடர்ந்து சுரங்கம் தோண்டும் பணிகள் மந்தமடைந்தன. இந்நிலையில், சுமார் 105 மணிநேர போராட்டத்துக்குப் பின்னர் சிறுவன் ராகுல் உயிருடன் மீட்கப்பட்டான்.

இது குறித்து ட்விட்டரில் பதிவிட்டுள்ள அம்மாநில முதலமைச்சர், மீட்புக் குழுவினரின் அர்ப்பணிப்பு மற்றும் அனைவரின் பிரார்த்தனையால் ராகுல் சாகு உயிருடன் மீட்கப்பட்டதாக தெரிவித்துள்ளார். சிறுவனை மீட்கும் பணியில் இடைவிடாது ஈடுபட்டு வெற்றியும் கண்ட மீட்புக் குழுவினருக்கு பாராட்டுகள் குவிந்து வருகிறது.

ஆழ்துளைக் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டதும் சிறுவன் ராகுல் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டான். ராகுல் ஷாகு நல்ல நிலையில் இருப்பதாகவும், ஐ.சி.யூவில் சிறப்பு மருத்துவர்கள் குழுவின் கண்காணிப்பில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்திய செய்திகள்

# மனைவியால் பாதிக்கப்பட்ட ஆண்கள் அரச மரத்தை சுற்றி நூதன வழிபாடு

**7 ஜென்மத்திற்கும் அவள் என் மனைவியாக வரக்கூடாது என வேண்டுதல்**



மராட்டியத்தில் புத்த பூர்ணிமா தினத்தில் பெண்கள் தங்கள் திருமண வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கவும், 7 ஜென்மத்திற்கு தற்போதுள்ள வாழ்க்கைத்துணையே கணவராக வர வேண்டும் எனவும் ஆலமரத்தை சுற்றி வந்து வழிபாடு செய்வது வழக்கம். அதன்படி பூரணை தினமாக நேற்றுமுன்தினம் பெண்கள் ஆலமரத்தை சுற்றி வந்து வழிபட்டனர்.

அதேநேரத்தில் அவுரங்காபாத்தில் ஆண்கள் அரச மரத்தை சுற்றிவந்து நடத்திய நூதன வழிபாடு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இவர்கள் தங்கள் மனைவிக்காக மரத்தை சுற்றிவரவில்லை. தற்போதுள்ள மனைவி, மீண்டும் எந்த ஜென்மத்திலும் தங்கள் வாழ்க்கைத்துணையாக வந்துவிடக்கூடாது என 108 முறை அரச மரத்தை சுற்றிவந்து வேதனையை வெளிப்படுத்தினர்.

மேலும் குடும்பத்தில் ஆண்களுக்கு எதிராக நடைபெறும் அநீதிகளுக்கு சட்டம் இயற்றப்பட வேண்டும் என வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர். இவர்கள் மனைவி மீது அதிருப்தியிலுள்ள பத்னி பீதித் (மனைவியால் பாதிக்கப்பட்டவர்கள்) என்ற சங்கத்தை நடத்தி வருபவர்களாவர். இந்த நூதன வழிபாடு குறித்து பத்னி பீதித்தின் நிறுவுனர் பாரத் புலாரே தெரிவிக்கையில்,

''பெண்களுக்காக பல சட்டங்கள் உள்ளன. அதை பெண்கள் தவறாக பயன்படுத்துகின்றனர். எனவே, ஆண்களுக்கு எதிராக நடைபெறும் அநீதிக்காகவும் சட்டம் இயற்றவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அதற்காக நாங்கள் இந்த நூதன வழிபாட்டை நடத்தி விழிப்புணர்வு செய்தோம்'' - என்றார்.

# பௌத்த அடையாளச் சின்னங்களை நிறுவி இலங்கையில் தமிழர் பகுதிகளை ஆக்கிரமிக்க முயற்சி

**தமிழர் உரிமையை மீட்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிறார் தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் பண்ருட்டி வேல்முருகன்**

"இலங்கையில் தமிழர் வாழும் பகுதிகளில் தொடர்ந்து பௌத்த விகாரைகள் கட்டப்பட்டு வரும் நிலையில், தமிழர் உரிமையை மீட்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" - என தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் பண்ருட்டி வேல்முருகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில்,

2009ஆம் ஆண்டு இலங்கையில் போர் முடிவுக்கு வந்த பின்னர், பௌத்தர்களின் ஆக்கிரமிப்புகளும், அதிகாரமும் தலைதூக்கத் தொடங்கின. ஈழத்தில் தமிழர் நிலங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, அங்கு சிங்களவர்களும், சிங்கள இராணுவமும் குடியமர்த்தப்பட்டன. தமிழர்களின் வழிபாட்டுத் தலங்கள், பௌத்த விகாரைகளாக மாறின.

குறிப்பாக, தமிழர்களின் வழிபாட்டிடமான செம்மலை நீராவியடிப்பிள்ளையார் இன்று பௌத்தர்களின் விகாரைகளாக வேரூன்றியிருக்கின்றது. நெடுங்கேணி வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் வழிபாட்டு உரிமைகள் மறுக்கப்பட்டு, இன்று பௌத்தர்களின் இராச்சியமானது. இப்போது குருந்தூர்மலையிலும் அதே நிலை ஏற்பட்டிருக்கின்றது.

ஈழத்தில், தமிழர்களின் பாரம்பரிய உரிமைகள் மறுக்கப்படும் இச்சூழலில், குருந்தூர்மலையில் சிங்கள பௌத்த அடையாள சின்னங்களை நிறுவி, தமிழர் பகுதிகளை ஆக்கிரமிக்கும் முயற்சி இன்று தொடக்கப்பட்டிருக்கின்றது. புத்தர் சிலை வைக்கப்பட்டு வழிபாடு நடத்தப்படும் கட்டுமானப் பொருட்களும் இன்று குவிக்கப்பட்டிருக்கின்றன.



முக்கியமாக, தற்போது குருந்தூர்மலையில் அமைக்கப்பட்டிருந்த சிவன், ஐயனாரின் சூலம் உடைக்கப்பட்டதோடு, வழிபாட்டு எச்சங்களும் எரிக்கப்பட்டுள்ளன.

குருந்தூர்மலை தமிழர்களின் பூர்வீக பகுதியே. அதிலுள்ள தெய்வங்களை அக்கிராம மக்கள் பூர்வீகமாக வழிபட்டு வந்திருக்கின்றார்கள். இதற்கு அங்குள்ள எச்சங்களும், சிதைவுகளும் வரலாற்று ரீதியாக பறைசாற்றுகின்றன. இங்கு கண்டுபிடிக்கப்பட்ட எச்சங்கள் 2300 ஆண்டுகாலம் பழமை வாய்ந்தவை என ஆய்வாளர்களால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆனாலும், இம்மலையில் இருக்கும் சிதைவுகளும், எச்சங்களும் பௌத்தர்களதென போலியான ஆதாரங்களை சித்திரித்ததோடு, வடகிழக்கில் காணப்படும் மலைகள், பௌத்த விகாரைகளை அடிப்படையாக கொண்டது என்று சிங்களப் பேரினவாத அரசு கட்டுக்கதைகளை கட்டவிழ்த்து வருகிறது. பன்முகத்தன்மை வாய்ந்த இந்தியாவை இந்துத்துவா என்ற ஒற்றை மதத்தின் பெயரால் நிறுவ மோடி அரசு எப்படி முயல்கிறதோ, அதேபோன்று, இலங்கையில் தமிழர் வாழும் பகுதிகளிலும் பௌத்தம் என்ற ஒற்றை மதத்தை நிறுவ சிங்கள பேரினவாத அரசு செயல்பட்டு வருகிறது.

தமிழக வாழ்வுரிமைக் கட்சியைப் பொறுத்தவரை வைதீகம், சமணம், பௌத்தம் ஆகிய மூன்று மதங்களுமே வண்ணக் கொள்கை உடையவைதான். மனிதர்களுக்குள் ஏற்றத்தாழ்வு கொண்டவைதான். இம்மூன்று மதங்களும் பிற்போக்கு கருத்துகளை உள்ளடக்கியவைதான். பௌத்தம் சமத்துவம் கொண்டவை என அண்ணல் அம்பேத்கர் கூறினாலும் கூட, அக்கருத்தில் தமிழக வாழ்வுரிமைக் கட்சி முரண்பட்டு நிற்கும்.

சமணம் பொறுத்தவரை வஜ்ரநந்தி முனிவனால் எழுதப்பட்ட, மனிதர்களுக்குள் ஏற்றத்தாழ்வுகளை உள்ளடக்கிய, சமண நூலான ஆசாரக்கோவையே சான்று. ஆனால், அவ்விவாதங்களுக்குள் நாம் தற்போது செல்ல வேண்டிய அவசியமில்லை. இலங்கையில் உள்ள தமிழர் பகுதிகளில் முருகன், சிவன், ஐயனார் கோயில்களை சிங்களப் பேரினவாத அரசிடமிருந்து காக்க, அங்குள்ள தமிழர்கள் குரல் எழுப்பியும், போராடியும் வருகின்றனர். அவர்களுக்கு ஆதரவாக குரல் கொடுக்க வேண்டியது தமிழக தமிழர்களின் கடமை.

எனவே, மிக தொன்மையான வரலாற்றைக் கொண்ட முல்லைத்தீவு குருந்தூர்மலையிலுள்ள ஆதிசிவன், முருகன், ஐயனார் கோயிலை காக்க, தமிழகத்திலுள்ள தமிழர்கள் குரல் கொடுக்க வேண்டும். இதில் கடவுளை ஏற்போரும் இருக்கலாம், கடவுளை மறுப்போரும் இருக்கலாம். அங்கு கோயில்கள் என்பதை தாண்டி தமிழர்களின் சுமார் 2,300 ஆண்டுகளுக்கு முந்தைய வரலாற்று எச்சங்கள் நிறைந்திருப்பதை நாம் கருத்திற்கொள்ள வேண்டும். வழிபாட்டு மறுப்பு என்பது, மற்றொரு வகையான போர் யுக்தி என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இது தொடர்பாக, தமிழக அரசும், மத்திய அரசின் துணையோடு இலங்கையிலுள்ள தமிழர்களின் வழிபாட்டுத்தலங்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றுள்ளது.

# இலங்கை அணியின் வெற்றியை பறித்த மெக்ஸ்வெல்: இன்று பதிலடி கொடுக்குமா இலங்கை?

அவுஸ்திரேலியா அணியுடனான முதலாவது ஒருநாள் சர்வதேச போட்டியில் இலங்கை அணி இறுதிவரை போராடி பரிதாப தோல்வியைத் தழுவியது.

ஆரோன் பிஞ்ச் தலைமையிலான சுற்றுலா ஆஸி. அணிக்கும், தசுன் சானக்க தலைமையிலான இலங்கை அணிக்கும் இடையிலான ஐந்து போட்டிகள்கொண்ட ஒருநாள் சர்வதேச தொடர் நேற்று முன்தினம் ஆரம்பமானது. கண்டி, பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் பகலிரவு போட்டியாக நடைபெற்ற முதலாவது ஒருநாள் சர்வதேச போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. இலங்கை இளையோர் அணியின் தலைவர் துனித் வெல்லாலகே நேற்றைய போட்டியில் இலங்கை அணியில் அறிமுகம் பெற்றுக்கொண்டார்.



முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு சிறப்பான ஆரம்பம் கிடைத்தது. தனுஷ்க குணதிலக்க மற்றும் பெத்தும் நிஸங்க ஜோடி சதம் கடக்க இருவரும் அரைச்சதத்தை பூர்த்தி செய்தனர். குணதிலக்க 55 ஓட்டங்களுடன் ரன் அவுட் முறையில் ஆட்டமிழக்க, நிஸங்க 56 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த தனஞ்சய டி சில்வா வெறும் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். எனினும், குசல் மெண்டிஸ் சரித் அசலங்க ஜோடி இலங்கை அணியை சரிவிலிருந்து மீட்டது.

அசலங்க 37 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இறுதிவரை போராடிய மெண்டிஸ் ஆட்டமிழக்காமல் 86 ஓட்டங்களைப் பெற, அதிரடியை வெளிப்படுத்திய ஹசரங்க 19 பந்துகளில் 37 ஓட்டங்களைக் குவித்தார். இறுதியில் 50 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 300 ஓட்டங்களை குவித்தது இலங்கை அணி.

301 ஓட்டங்களை இலக்காகக்கொண்டு ஆஸி. அணி பதிலுக்கு துடுப்பெடுத்தாடும்போது போட்டியின் 13ஆவது ஓவரில் மழை குறுக்கிட்டது. அதன்பின்னர் போட்டி 44 ஓவர்களாக மட்டுப்படுத்தப்பட்டு ஆஸி. அணிக்கு வெற்றி இலக்காக 282 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. ஆஸி. அணி ஆரம்பத்தில் தடுமாறினாலும் க்ளேன் மெக்ஸ்வெல்லின் அதிரடி துடுப்பாட்டம் காரணமாக ஆஸி. அணி 42.3 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட் இழப்புக்கு வெற்றி இலக்கை அடைந்தது.

இலங்கை அணிக்கு செம்ம சொப்பனமாக விளங்கிய மெக்ஸ்வெல் 51 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 80 ஓட்டங்களைக் குவித்து போட்டியின் ஆட்டநாயகனாகவும் தெரிவானார். இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது போட்டி இன்று அதே மைதானத்தில் ஆரம்பமாகிறது.

# இலங்கைக்கு வெள்ளிப் பதக்கம்



இந்தியாவின் சென்னை நேரு விளையாட்டு அரங்கில் நடைபெற்று வருகின்ற 61ஆவது இந்திய மாநிலங்களுக்கு இடையிலான தேசிய சிரேஷ்ட மெய்வல்லுனர் போட்டியில் ஆண்களுக்கான 4×400 மீற்றர் அஞ்சலோட்டத்தில் பங்குகொண்ட இலங்கை அணி வெள்ளிப் பதக்கம் வென்றது.

போட்டித் தொடரின் 5ஆவதும், கடைசியும் நாளான நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்களுக்கான 4×400 மீற்றர் அஞ்சலோட்டத்தில் அருண தர்ஷன தலைமையிலான இலங்கை அணி போட்டியில் முதலிரண்டு கோல் பரிமாற்றங்களிலும் முன்னிலை பெற்றாலும், கடைசி இரண்டு கோல் பரிமாற்றங்களில் சற்று பின்னடைவை சந்தித்தது.

எவ்வாறாயினும், அருண தர்ஷன, இசுரு லக்ஷான், தினுக தேஷான், பபசர நிகு ஆகியோர் அடங்கிய இலங்கை அணி வெள்ளிப் பதக்கம் சுவீகரித்தது. அவர்கள் போட்டித் தூரத்தை 3 நிமிடம் 06.05 செக்கன்களில் கடந்தனர். இதன்மூலம் நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு ஆண்களுக்கான 4×400 மீற்றர் அஞ்சலோட்டத்தில் இலங்கை அணி சிறந்த நேரப் பெறுமதியைப் பதிவுசெய்தது.

முன்னதாக 2018 ஆசிய விளையாட்டு விழாவில் ஆண்களுக்கான 4×400 மீற்றர் அஞ்சலோட்டத்தை 3 நிமிடம் 02.74 செக்கன்களில் இலங்கை அணி நிறைவுசெய்தமை குறிப்பிடத்தக்கது. போட்டியை 3 நிமிடம் 05.34 செக்கன்களில் நிறைவுசெய்த இந்திய 'ஏ' அணி தங்கப் பதக்கத்தையும், இந்திய 'பி' அணி போட்டியை 3 நிமிடம் 15.78 செக்கன்களில் நிறைவுசெய்து வெண்கலப் பதக்கத்தையும் சுவீகரித்தது.

# தோல்விகளுக்கு முற்றுப்புள்ளி வைத்த இந்தியா



தென்னாபிரிக்க அணிக்கு எதிரான மூன்றாவது இருபதுக்கு 20 சர்வதேச போட்டியில் இந்திய அணி 48 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்று தொடர் தோல்விகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

5 போட்டிகள்கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரின் முதல் இரு போட்டிகளிலும் தென்னாபிரிக்க அணி வெற்றிபெற்ற நிலையில், மூன்றாவது போட்டி விசாகப்பட்டினத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. நாணய சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணி முதலில் பந்து வீச்சை தெரிவுசெய்யவே, முதல் பேட்டிங்கில் இந்திய அணி களமிறங்கியது.

இந்திய அணியின் தொடக்க வீரர்களாக களமிறங்கிய ருதுராஜ் கெய்க்வாட் மற்றும் இஷான் கிஷன் இருவரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி அரைச்சதங்களை கடக்கவே இந்திய அணி வலுவான அடித்தளத்தை பெற்றது. இருப்பினும், அடுத்தடுத்த வந்த வீரர்களில் ஹர்திக் பாண்டியா தவிர மற்ற அனைத்து வீரர்களும் தங்களது சிறப்பான ஆட்டத்தை வழங்கத் தவறியதை தொடர்ந்து இந்திய அணி 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 179 ஓட்டங்களை குவித்தது.

இதனைத் தொடர்ந்து, 180 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கைக்கொண்டு களமிறங்கிய தென்னாபிரிக்க அணியில் எந்தவொரு வீரர்களும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த தவறியதையடுத்து 19.1 ஓவர்களில் 10 விக்கெட்டுகளையும் இழந்து வெறும் 131 ஓட்டங்கள் மட்டுமே குவித்த நிலையில், இந்திய அணியிடம் 48 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியை தழுவியது.

ஆட்டநாயகனாக 20 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டுகளை வீழ்த்திய இந்திய சுழற்பந்துவீச்சாளர் யுஸ்வேந்திர சாஹல் தெரிவானார். ஐந்து போட்டிகள்கொண்ட இந்தத் தொடரில் மூன்று போட்டிகள் முடிவடைந்துள்ள நிலையில், தென்னாபிரிக்க அணி 2-1 கணக்கில் முன்னிலையில் உள்ளது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# முன்னாள் கிரிக்கெட் வீரர்கள், நடுவர்களுக்கு பென்ஷன் கொடுக்க ஐ.பி.எல். முடிவு

(ரமணி)

ஐ.பி.எல். மீடியா உரிமைகளுக்கான ஏலம் சுமார் ரூ. 45,000 கோடி வருவாயை உறுதிசெய்ததையடுத்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை, முன்னாள் வீரர்கள் மற்றும் நடுவர்களுக்கான ஓய்வூதியத்தை அதிகப்படுத்தியுள்ளது.

ஜூன் 1ஆம் திகதிமுதல் இந்த ஓய்வூதிய உயர்வு அதிகரித்துள்ளது, அதாவது ரூ. 15,000, ரூ. 22,500, ரூ. 30,000, ரூ. 37,500, ரூ. 50,000 பென்ஷன் ஸ்லாப் தொகைகள் முறையே ரூ. 30,000, ரூ. 45,000, ரூ. 52,500, ரூ. 60,000 மற்றும் ரூ. 70,000 என்று அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதை செய்தி அறிக்கை மூலம் தெரிவித்த பி.சி.சி.ஐ. தலைவர் சவுரவ் கங்குலி, வீரர்கள் உயிர்நாடியாக இருக்கிறார்கள், ஒரு சபையாக அவர்கள் விளையாடும் நாட்கள் முடிந்தவுடன் அவர்களுக்கு பக்கபலமாக இருப்பது எங்கள் கடமை என்றார்.



2008இல், ஐ.பி.எல். தொடக்க சீசனில், போட்டியின் ஊடக உரிமை மதிப்பு ரூ. 13.6 கோடியாக இருந்தது. 2018இல் ரூ. 54.5 கோடியாக உயர்ந்து, இந்த முறை ரூ. 107.5 கோடியாக உயர்ந்துள்ளது. ஊடக உரிமைக்கான ஏலம் நடைபெற்று வருகிறது. அனைத்து ஊடக உரிமைகளுக்குமான ஏலத்தின் மூலம் பி.சி.சி.ஐ. வருவாய் ரூ. 60,000 கோடியை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், முன்னாள் வீரர்களையும் பி.சி.சி.ஐ. கவனிக்க முன்வந்துள்ளது பெரும் பாராட்டுகளை பெற்று வருகிறது.

# பேர்ஸ்டோவின் அதிரடியால் மிரட்டல் வெற்றிபெற்ற இங்கிலாந்து



நியூசிலாந்துக்கு எதிரான 2ஆவது டெஸ்டை 5 விக்கெட் வித்தியாசத்தில் வென்று டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியுள்ளது இங்கிலாந்து அணி. முதல் டெஸ்டில் இங்கிலாந்து அணி வெற்றிபெற்று முன்னிலை வகித்த நிலையில், 2ஆவது டெஸ்ட் நோட்டிங்கமில் நேற்று முன்தினம் நிறைவுக்கு வந்தது. நியூசி. கேப்டன் கேன் வில்லியம்சனுக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டதால் இந்த டெஸ்டில் அவர் பங்கேற்கவில்லை.

நியூசிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 553 ஓட்டங்கள் எடுத்தது. டேரில் மிட்செல் 190, டாம் பிளண்டல் 106 ஓட்டங்கள் எடுத்தார்கள். இதையடுத்து பேட்டிங் செய்த இங்கிலாந்து அணி 539 ஓட்டங்கள் எடுத்து அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. நியூசிலாந்து முதல் இன்னிங்ஸில் 14 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது. ரூட் 176, போப் 145 ஓட்டங்கள் எடுத்தனர்.

2ஆவது இன்னிங்ஸில் பேட்டிங் செய்த நியூசிலாந்து அணி, 4ஆம் நாள் முடிவில் 69 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 224 ஓட்டங்கள் எடுத்தது. 5ஆம் நாளில் 84.4 ஓவர்களில் 284 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. அதன்படி இங்கிலாந்து அணி வெற்றி பெற 299 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

அந்த அணி அட்டகாசமாக விளையாடி 50 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 299 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றியை அடைந்தது. பேர்ஸ்டோ 92 பந்துகளில் 7 சிக்ஸர்கள், 14 பவுண்டரிகளுடன் 136 ஓட்டங்களும் ஸ்டோக்ஸ் ஆட்டமிழக்காமல் 75 ஓட்டங்களும் எடுத்தார்கள்.

3 ஆட்டங்கள்கொண்ட டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து அணி 2-0 என முன்னிலை பெற்று தொடரைக் கைப்பற்றியுள்ளது. 3ஆவது டெஸ்ட், லீட்ஸ் மைதானத்தில் எதிர்வரும் வியாழக்கிழமை ஆரம்பமாகிறது.

# கிழக்கின் 32 முன்னணி கழகங்களை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை தனதாக்கிய சம்மாந்துறை வி.க.









(மாளிகைக்காடு நிருபர்)

40 வருடங்கள் பழமையான சாய்ந்தமருது பிளையிங் கோர்ஸ் விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்த கிழக்கு மாகாண 32 முன்னணி கழகங்கள் பங்குபற்றிய பௌசி கிண்ண இருபதுக்கு 20 கடினபந்து கிரிக்கட் சுற்றுத்தொடரின் இறுதியாட்டத்தில் வென்று சம்பியன் பட்டத்தை சம்மாந்துறை விளையாட்டுக் கழகம் தனதாக்கிக் கொண்டது.

சாய்ந்தமருது பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இறுதிப் போட்டியில் சாய்ந்தமருது ஹொலிஹீரோஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து விளையாடிய சம்மாந்துறை விளையாட்டுக் கழகம் நாணய சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயித்த 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 131 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

132 எனும் வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சாய்ந்தமருது ஹொலிஹீரோஸ் விளையாட்டுக் கழகம் ஆரம்பம்முதல் தடுமாறிவந்த நிலையில், 16.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 95 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக சம்மாந்துறை விளையாட்டுக் கழக வீரர் நிக்காஸ் தெரிவுசெய்யப்பட்டார்.

சாய்ந்தமருது பிளையிங் கோர்ஸ் விளையாட்டுக் கழகத் தலைவர் ஓய்வுபெற்ற அதிபர் ஐ.எல்.ஏ.மஜீட் தலைமையில் இடம்பெற்ற இறுதிநாள் நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை மாநகர முன்னாள் முதல்வர் கலாநிதி ஷிராஸ் மீராசாஹிப் கலந்துகொண்டதுடன், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் கௌரவ அதிதியாக கலந்துகொண்டார்.

மேலும் சாய்ந்தமருது பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர், இளைஞர் சேவை உத்தியோகத்தர், அனுசரணையாளர்கள், சாய்ந்தமருது கிரிக்கெட் கழகங்களின் சங்க நிர்வாகிகள், சாய்ந்தமருது பிரதேச கிரிக்கெட் கழகங்களின் நிர்வாகிகள், பிளையிங் கோர்ஸ் விளையாட்டுக் கழக நிர்வாகிகள், முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களை வழங்கினர்.

சம்பியன் பட்டத்தை வென்ற சம்மாந்துறை விளையாட்டுக் கழகத்திற்கு வெற்றிக்கேடயத்துடன் 50 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7